பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி4 வெள்ளிக்கிழமை (20-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:236

✪ குண்டாந் தடியடிப் பிரயோகம்! ✪ இறப்பர் குண்டு வேட்டு!!
✪ கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு!!

# பொலீஸ் அடக்குமுறைகளையும் மீறி எதிரணியினர் ஆர்ப்பாட்டப் பேரணி!

## ஒரு லட்சம் பேர் திரண்டனர்

கொழும்பு,ஜூலை20

**ஜனநாயகத்தை மீட்கக் கோரி எதிர்கட்சியினர் தலைநகர் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டங்கள் பொலீஸாரின் கண்மூடித்தனமான குண்டாந்தடியடி பிரயோகம், இறப்பர் வேட்டுக்கள், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சுக்கள் போன்ற அடக்குமுறைகளை மீறி வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.**

**தலைநகருக்கு வெளியில் இருந்து வந்து ஒன்றுகூடிய சுமார் ஒரு லட்சத்துக்கு அதிகமானோர் இந்த எதிர்ப்பியக்கத்தில் கலந்துகொண்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.**

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள முடியாத ஜனாதிபதி, ஜனநாயக விரோத முறையில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்திருப்பதாகத் தெரிவித்து, அதனை ஆட்சேபித்து, உடனடியாக நாடாளுமன்றத்தை அழைக்கும்படி கோரி நேற்று தலைநகர் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்ட இயக்கத்துக்கு ஐ.தே.க. தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

எனினும் சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பான அறிவித்தல் வெளியானதைக் காட்டி, அது தொடர்பான சட்டத்தின் கீழ் ஊர்வலங்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் மா அதிபர் அறிவித்திருந்தார்.

ஆனாலும் இந்தத் தடையை மீறி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தப்போவதாக எதிர்க்கட்சி கூட்டமைப்பு பதில் அறிவிப்பு விடுத்திருந்தது.

அதன்படி பொலீஸ் அடக்குமுறையை மீறி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நேற்று வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டன.

ஆறு முனைகளிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் கொழும்பை

(14 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பில் நேற்று பொலீஸாரின் தாக்குதலில் வீழ்ந்து கிடக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுள் ஒருவரான வயோதிப மாது.

## ரணிலை இலக்கு வைத்தும் நேற்று இறப்பர், கண்ணீர்ப் புகைக் குண்டுகள்

கொழும்பு,ஜூலை20

[illegible]றுக் கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மீது இறப்பர் குண்டுகள் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ரணில் விக்கிரமசிங்க மீது இவ்வாறு மூன்று இடங்களில் வைத்துத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் -

எனினும் அவர் காயங்கள் எதுவுமின்றித் தப்பியதாகவும் -

சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

நுகேகொடை சந்தியிலும், மருதானை மற்றும் புஞ்சிபொரளைச் சந்தியில் வைத்தும் இவ்வாறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மருதானை, புஞ்சிபொரளைப் பகுதியில் தாக்குதல் நடந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வி.ஆனந்தசங்கரியும் ரணிலுடன் உடனிருந்தார்.

ரணிலை நோக்கிய முதலாவது இறப்பர், கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் நேற்று நுகேகொடையில் நடத்தப்பட்டது. இதனால் அங்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தன்னை ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் கொல்ல முயற்சித்ததாக ரணில் குற்றச்சாட்டு

### 'ஹிட்லர் மேடம்' என்று சந்திரிகாவை வர்ணிக்கிறார்

கொழும்பு,ஜூலை20

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தோரே தம்மை நோக்கி இறப்பர் குண்டுகளால் சுட்டும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவியும் தம்மைக் கொல்ல முயன்றதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

நுகேகொடை மற்றும் மருதானைப் பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் தம்மை நோக்கி நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து கொழும்பு மாநகர சபைக் கூட்டத்தில் வைத்து செய்தியாளர்களுக்குத் தகவல் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

"அவர்கள் பொலீஸ் சீருடை அணிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் பொலீஸ் சேவை உறுப்பினர்கள் அல்லர். ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள். என்னுடைய ஜீப்புக்குள்ளும் அவர்கள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவினர்" - என்றும் ரணில் அங்கு கூறினார்.

"நான் நுகேகொடை சந்திப்பு வரை சென்றேன். அங்கு கூடியிருந்த பெருங்கூட்டத்தினர் பொலீஸார் அமைத்திருந்த தடைகளை அகற்றி கொழும்பு நகருக்குள் செல்ல முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் 'நமக்கு பொலீஸாருடன் சண்டை ஏதுமில்லை. எனவே பொலீஸாரைத் தவிர்த்து சிறு வீதிகள், ஒழுங்கைகள் எனக் கிடைத்த வழிகளினூடாகக் கொழும்பு நகருக்குள் செல்லலாம்' என்று கூறினேன்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன், ஜயலத் தாக்குதல்களில் காயம்

கொழும்பு,ஜூலை20

நேற்று தலைநகர் கொழும்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரனும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவும் காயமடைந்தனர்.

மருதானையில் பொலீஸார் மேற்கொண்ட தடியடிப்பிரயோகத்திலேயே பெ.சந்திரசேகரனும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் காயமடைந்தனர்.

தலையில் பலத்த காயம் அடைந்த சந்திரசேகரன் ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வத்தளையில் இருந்து ஓர் அணியை ஊர்வலமாகக் கூட்டி வந்த டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன பேலியகொடையில் நடந்த தாக்குதலில் காயமடைந்தார். (உ-3-10)



கண்ணீர்ப் புகைக் குண்டிலிருந்து பாதுகாப்புத் தேடி ஓடும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

## பொலீஸாரின் தாக்குதல்களில் இருவர் பலி; 80 பேர் காயம்

கொழும்பு,ஜூலை20

நேற்று அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டகாரர்கள் மீது பொலீஸார் நடத்திய தாக்குதல்களில் இருவர் உயிரிழந்தனர்; எண்பதுக்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர். அவர்களில் பத்துப் பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தெமட்டக்கொடையைச் சேர்ந்த அசிந்த பெர்னாண்டோ (வயது25) என்ற இளைஞனும், கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த மஞ்சு பிரசாத் (வயது29)என்ற யுவதியுமே உயிரிழந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்க்கட்சிகளின் எம்பிக்களைக் கொண்ட குழு ஒன்று நேற்று காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிகளில் சென்று பார்வையிட்டது.

காயமடைந்தவர்களில் லேக்கவுஸ் நிறுவனப் படப்பிடிப்பாளர் அமரசிங்கவும் ஒருவராவார். (உ-3)

## மலையகத்தில் வேலை நிறுத்தம்

கொழும்பு,ஜூலை20

அரசுக்கு எதிராகத் தலைநகர் கொழும்பில் எதிரணியினர் மேற்கொண்ட போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மலையகத்தில் தோட்டத்தொழிலாளர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மலையகத்தில் சகல தோட்டங்களிலும் இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றது என்றும் -

இ.தொ.காவின் பங்களிப்பு இன்றியே பெரிய அளவில் நேற்றைய வேலைநிறுத்தம் இடம்பெற்றது என்றும் -

ஐ.தே.கட்சி சார்புத் தொழிற்சங்கப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வாசகர் திருமுகம்

## பரீட்சைக் கட்டண விடயம்: அவசரத் தீர்வு ஒன்று அவசியம்

பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சைக் கட்டணங்கள் எவையும் அறவிடக் கூடாது எனத் தங்கள் பத்திரிகை மூலம் கல்விப் பணிப்பாளர் அறிவித்திருந்தமை தொடர்பாக இக்கடிதத்தை வரைகின்றேன்.

பாடசாலையில் ஆசிரியராக, அதிபராக் பல ஆண்டுகள் கடமையாற்றி இன்று ஓய்வு பெற்றிருப்பினும், இத்தகு அறிவிப்பு பாடசாலை அதிபர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எவ்வளவு பாதிப்பை உண்டுபண்ணியிருக்கும் என்ற மன உளைச்சல் காரணமாகவும் என் பேரப்பிள்ளைகளும் படிக்கின்றார்கள், அவர்களின் செயற்பாடுகளுக்குப் பின்னடைவுகள் ஏற்படக்கூடாது என்ற வகையிலும் இம் மன வெளிப்பாடுகளை வாசகர் முன்வைத்து ஆறுதலடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இம்முறையன்றி இதுவரை காலமும் கட்டணங்கள் அறிவிடப்படாமல் எவ்வித பரீட்சைகளும் நடத்தப்படவில்லை. இதுவிடயத்தில் சிறிய பாடசாலைகள் பெரிய பாடசாலைகளுடன் இணைந்து தமது செலவினங்களைக் கட்டுப்படுத்தி வந்துள்ளன. கணிப்பீடு அம்சங்களில் இத்தகைய பரீட்சை அமைப்புக்கள் தேவையில்லை எனக் கருதப்பட்டாலும் அறிவுசார் மதிப்பீடுகள் இன்னும் இறுதி மதிப்பீடாகக் கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கணிப்பீட்டு அம்சங்கள் அலகுரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தவணையின் போதும் ஆசிரியர் பொருள்களை வைத்து ஒவ்வொரு மாணவராகப் பரீசிக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதாயின் அது நேரச் செலவையும் விரக்தியையும் தெளிவின்மையையுமே ஏற்படுத்திவிடும். மாணவர், பெற்றோர் விளங்கிக் கொள்ளும் வகையில் கணிப்பீட்டு அம்சங்களை உட்படுத்திச் செயற்படுத்தப்படும் மதிப்பீட்டைச் செய்ய வினாத்தாள்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் யாரும் மறுப்புத் தெரிவிக்க மாட்டார்கள் என்பதில் முழுமையான நம்பிக்கை எனக்குண்டு. வினாத்தாள்கள் வழங்குவதாயின் செலவினம் ஈடுசெய்யப்பட வேண்டும். செலவினங்களைத் திணைக்களம் வழங்குவது போன்று பத்திரிகை அறிகையை வெளியிட்டிருப்பதாகப் பல பெற்றோர்கள் விளங்கியிருக்கலாம். அல்லது பாடசாலை நிதியீட்டங்களைப் பயன்படுத்த அனுமதித்திருக்கலாம். ஆனால் இந்த ஒதுக்கீடுகள் எந்தளவு செலவினங்களைச் செம்மைப்படுத்தும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஓர் ஒழுங்கு முறையைக் கட்டுப்படுத்துவது - தடைப்படுத்துவது - இலகு. ஆனால் மீள ஆரம்பிக்கப்படும்போது ஏற்படப் போகும் கஷ்டங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பரீட்சைகள் ஒவ்வொன்றின் போது பாடசாலைகள், கோட்டங்கள், வலயங்கள் கட்டணங்களை அறவிட்டுள்ளன.

சில பாடசாலைகள் கூடுதலான கட்டணங்களை அறவிடுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. அதற்காக முழு அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை மன்வருத்தத்திற்குரியதாகும்.

பரீட்சைகள் மூலம் அனுபவங்களைப் பெற்றுள்ள கல்விப் பணியினர் பொதுவான கட்டணங்களை அறிமுகப்படுத்தி பரீட்சை நடத்த ஒத்துழைப்பதே பொருத்தமானது என எண்ணுகின்றேன். பரீட்சைக்காகப் பணம் செலுத்தத் தவறும் பெற்றோர்கள் இங்கு எவரும் இருக்கமாட்டார்கள். அந்த வகையில் அநேக பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் சார்பில் எனது கருத்துக்களை முன்வைத்து ஆக்கபூர்வமான தீர்வுகள் கிடைக்குமா என எதிர்பார்க்கின்றேன்.

*யாழ்ப்பாணம்.* **- ஒரு முன்னாள் அதிபர்.**

**ஆசிரியர் குறிப்பு:-**

*1) கணிப்பீட்டுமுறை நடைமுறைக்கு வந்த பின்னரும் கோட்ட, வலய மட்டங்களில் - மாணவர்களிடம் பணம் அறவிட்டு - பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றில் பல ஊழல்கள், குளறுபடிகள், மோசடிகள் இடம்பெற்றதாக அவ்வப்போது முறைப்பாடுகள் வராமல் இல்லை.*

*2) பரீட்சைக்கு எனப் பணம் சேர்ப்பதில் ஊழல், மோசடி இருந்தால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய மாற்று நடவடிக்கைகளை அந்தந்தப் பாடசாலைச் சமூகத்தின் உதவியுடன் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே கல்வி நிர்வாகிகளின் உரிய நிர்வாக நடைமுறையாக இருக்க முடியும். அதைவிடுத்து பரீட்சைக்காகப் பணம் சேர்க்கக்கூடாது என்று கண்ணை மூடிக்கொண்டு உத்தரவிடுவது சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்டும் செயலாக அமையாதா? சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் உரிய விளக்கம் தருவது நல்லது.*

*3) சரியோ, பிழையோ நமது கல்விமுறை மற்றும் மதிப்பீடுகள் காலங்காலமாக பரீட்சைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஒரே நாளில் அதைத் தூக்கி எறியும் நமது கல்வி அதிகாரிகளின் செயற்பாட்டை நமது கல்விச் சமூகம், பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் போன்றவை அப்படியே ஏற்றுக் கொள்ளலாமா? இது விடயத்தில் உடனடித் தலையீடும் சரியான தீர்வும் அவசியமில்லையா? ஏனைய மாவட்டங்களில் என்ன நடைமுறை பின்பற்றப்படுகின்றது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாதா?*

*உரிய தரப்புகளில் இருந்து இது தொடர்பாக வரும் விளக்கங்களுக்கு உதயனில் இடமளிக்கப்படும்.* (ஆ-ர்)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 19 - 02 - 1930

இறப்பு 19 - 07 - 2001

நீர்வேலி மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பிரதம அர்ச்சகரும் எமது மதிப்பிற்குரியவருமான

**பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் குகதாசசர்மா**

[இளைப்பாறிய அரச கட்டட பரிசோதகர் (P.W.D.)]

**அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விஸ்ணோ நகைப் பூங்கா,
*185, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C-17494)

## கோண்டாவிலில் தமிழ்த்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை20

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் தமிழ்த்தின நிகழ்வுகள் இன்று காலை வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் கலந்து கொள்வார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெறும். (உ-3)

## தலைவர் பதவியை இராஜினாமா

யாழ்ப்பாணம்,ஜூலை20

தமிழர் விடுதலைக் கூட்டணியின யாழ். மாநகர சபை உறுப்பினரான செல்லையா விஜயரத்தினம் சபையின சுகாதாரக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த டாக்டர் ஆர்.தெய்வேந்திரன் மீண்டும் அந்தப் பதவியை ஏற்றால், சுகாதாரக் குழுத் தலைவர் பதவியில் இருந்து விலகிவிடுவேன் என முன்னர் தான் தெரிவித்திருந்ததாகவும் -

டாக்டர் தெய்வேந்திரன் மீண்டும் பதவியை ஏற்றுள்ளதால் தான் சுகாதாரக் குழுத் தலைவர் பதவியில் இருந்து விலக முடிவு செய்ததாகவும் -

அவர் தெரிவித்தார். (உ-3-9)

## பரீட்சை அனுமதி அட்டைகள் வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜூலை20

அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சாத்திகளின் பரீட்சை அனுமதி அட்டைகள் மற்றும் பரீட்சைக்கான காகிதாதிகள் நேற்று எடுத்துவரப்பட்டன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அந்தந்தக் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் இன்று தபாலில் சேர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மாதிரி வினாப் புத்தகங்கள் என்பனவும் எடுத்து வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

## நீதிமன்றில் நால்வர் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை20

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின கீழ் யாழ்.பொலீஸாரால் சந்தேகத்தின் பேரின் கைது செய்யப்பட்ட நால்வர் காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பொலீஸாரால் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

செம்மணி வீதி,முத்திரைச் சந்தி, நல்லூரைச் சேர்ந்த சேதுபதி பாக்கியலட்சுமி, அவரது மகன் சேதுபதி சதீஸ்குமார் ஆகியோரும் -

அன்னசத்திர ஒழுங்கை கந்தர் மடத்தைச் சேர்ந்த செல்வராஜா, அவரது மகன் செல்வராஜா கதீஸ் ஆகியோரும் -

நேற்று யாழ்நீதிவான் இத.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை அடுத்த மாதம் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-6-4)

## மிதிவெடியில் இளைஞர் கால் இழப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை20

தென்மராட்சி, கல்வயல் பகுதியில் மிதிவெடியில் சிக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணன் லோகேஸ்வரன் (வயது 24) என்பவரே காலை இழந்தார்.

கல்வயல் பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் வைத்த தமது உடைமைகளைப் பார்ப்பதற்குச் சென்ற வேளையில் அவர் மிதிவெடியில் சிக்கியதாகக் கூறப்படுகின்றது.

இவர் தற்பொழுது யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10-117)

## பல்கலைக்கழகத்தைத் திறக்கக் கோரி
# தொழில்நுட்பக் கல்லூரியில் கறுப்புப் பட்டிப் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

மூடப்பட்டிருக்கும் யாழ்பல்கலைக் கழகத்தை உடன் மீளத்திறக்கும் படியும் -

பல்கலைக்கழகத்தை மூடியதற்கான காரணங்களை வெளிப்படுத்தும படியும் கோரி -

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி சமூகத்தினர் கறுப்புப்பட்டிப் போராட்டத்தை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

கல்லூரி விரிவுரையாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்தே விரிவுரைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் கல்லூரி வளவுக்குள் கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன. (ஐ-3-6)

உ
தேவி திருவருள் துணை
*தும்பளை இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு வீரமாகாளியம்மன்*
*வட பத்திரகாளியம்மன் தேவஸ்தான*

**மகா மண்டலாபிஷேக அன்னதானப் பெருவிழா**

**விஞ்ஞாபனம்**

காலம்:- 20-07-2001 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி
தொடக்கம் 10 மணி வரை பெருவிழாவும் திருவிழாவும்
**பிரதமகுரு சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்**
பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்
*கௌரவிப்பும் விசேட விருது வழங்கலும் தங்கப்பதக்கம் சூடலும்*
வழங்குபவர்:- பேராசிரியர் **அ.சண்முகதாஸ் அவர்கள்.**
10.00 மணிக்கு - பீடாதிபதி சிவஸ்ரீ சு. முத்துக்குமாரசாமிக் குருக்கள் அவர்களின் கௌரவிப்பு
10.30 மணிக்கு - கும்பாபிஷேக மலர் வெளியீடு.
12.00 மணிக்கு - அன்னதானம் வழங்கல்.
3.00 மணிக்கு - L.S. ஜெகநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி.
*சமயச் சொற்பொழிவு:-*
1. **திரு.பா.சுப்பிரமணியம்** (மல்லாகம் மாவட்ட நீதிபதி)
2. **திரு.மு.திருநாவுக்கரசு** (புலவர்) விகடகவி, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி
வில்லிசை:- கலாபூஷணம், கலாவினோதன், வில்லிசைப் புயல், **கணபதிப்பிள்ளை குழுவினா** (சின்னமணி)
உபயகாரர்கள்:
**பேராசிரியர் அ.சண்முகதாஸ்,**
**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.**
*பருத்தித்துறை.*

(90267)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா சண்முகம்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் இராசம்மா நேற்று 19-07-2001 பிற்பகல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற 'சிற்ப கலாமாபானு' கார்த்திகேசு சணமுகம் ஆச்சாரியாரின் அன்பு மனைவியும், ரகுநாதன் (சவூதிஅரேபியா), மகேஸ்வரன், திருமதி அன்னலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேசலிங்கம், புஸ்பராணி, நகுலேஸ்வரி ஆகியோரின் மாமியும், மதிவதனி, மயூரதி, விதுஷன், கம்ஷத்வனி, டினேசன், மயூரேசன், கார்த்திகேயன், கனகசபேசன், கம்சலா, கோவர்த்தனன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, கந்தையா மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, நல்லதம்பி, வள்ளியம்மை மற்றும் நாகலட்சுமி, வடிவேலு, பரஞ்சோதி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-07-2001) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச.ரகுநாதன் (மகன்),
ச.மகேஸ்வரன் (மகன்),
சி.கணேசலிங்கம் (மருமகன்).

*அம்மன் வீதி,*
*பண்டத்தரிப்பு.*

(90265)

## திருமதி ஆறுமுகம் திருநாயகம்

அரியாலை ஈச்சங்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் திருநாயகம் நேற்று (19-07-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரவேலு - தங்கம்மாவின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கனகசபை, சண்முகலிங்கம் மற்றும் யோகராசா (ஜேர்மனி), சுப்பிரமணியம் (மசை மணியம்), தர்மலிங்கம்(இலங்கை மின்சார சபை ஊழியர் - திருமலை), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வல்லிபுரம், சரஸ்வதி, மங்கையர்க்கரசி (ஜேர்மனி), சரஸ்வதி, புவனேஸ்வரி, தேவராணி, சண்முகநாதன் (யாழ்.பல்கலைக் கழக ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19-07-2001) வியாழக்கிழமை 179, பலாலி வீதி, திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சண்முகநாதன்
(யாழ்.பல்கலைக்கழக ஊழியர்)

*179, பலாலி வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(சி17503)

## திருமதி சந்தானலட்சுமிஅம்மா கணேசலிங்கக் குருக்கள்

தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.கணேசலிங்கக் குருக்களின் அன்பு மனைவி சந்தானலட்சுமி அம்மா நேற்று (19-07-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19-07-2001) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ
சி. கணேசலிங்கக் குருக்கள
(கணவர்)

*காசிவிநாயகர் தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

(90264)

# இந்தோனேஷியாவில் இன்று முதல் அவசரகால நிலை பிரகடனம்

## எனினும் நடைமுறைக்கு வராது

ஜகார்த்தா,ஜூலை20

இந்தோனேஷியா அதிபர் அப்துல் ரஹுமான் வாஹிட் இன்று முதல் நாட்டில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

அவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளுமாறு ஆளும் கட்சி அதிருப்தியாளர்களும் எதிர்க்கட்சியினரும் கொடுத்து வரும் அழுத்தத்தைச் சமாளிப்பதற்காகவே நாட்டில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தப்போவதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவசரகால நிலைப் பிரகடனம் உடனடியாக நடைமுறைக்கு வராது என்று கூறிய வாஹிட் தன் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளதற்கு முதல் நாள் அது நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கால அவகாசம் எதிர்க்கட்சியினர் தன்னுடன் சமரசம் செய்து கொள்வதற்காகவே விடப்பட்டதாகவும் அவர் சொன்னார். (ம-7-9)

# பா.ம.க. தனித்துப் போட்டி

சென்னை,ஜூலை20

தமிழ் நாட்டில் விரைவில் நடைபெற உள்ள உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி தனியாகப் போட்டியிட்டு மற்றக் கட்சிகளுக்குத் தனது பலத்தை நிருபிக்கும் என்று அந்தக் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கிறார்.

மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மீண்டும் சேரவேண்டும் என்பதில் பா.ம.கவில் ஒருமித்த கருத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ)

# ஆப்கானிஸ்தானில் கொலரா வேகமாகப் பரவுவதாக அறிவிப்பு

## இதுவரை 50 பேர் உயிரிழப்பு

காபூல்,ஜூலை20

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதி நகரங்களில் வாந்திபேதி (கொலரா) நோய் வேகமாகப் பரவி வருவதாக 'ரோய்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த நோயால் இதுவரை 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகவும் -

சுமார் 2ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் இந்த நோயின் தாக்கத்துக்கு ஆளாகி இருப்பதாகவும் - அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. நோயின் தாக்கத்துக்கு அஞ்சி பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி, வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

நோயால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு என ஐ.நாவின் நலவாழ்வு மையம் அனுப்பிவைத்த மருந்துப் பொருள்களை ஏற்க மறுத்துள்ள ஆளும் தலிபான்கள் அவற்றைத் திருப்பி அனுப்பியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனால் அங்கு உயிரிழப்புகள் மேலும் மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. (ம-7-9)

# அமெரிக்க அதிபர் பிரிட்டனுக்கு விஜயம்

## மகாராணியையும் சந்திப்பார்

லண்டன்,ஜூலை20

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரிட்டன் வந்துள்ளார்.

பிரதமர் ரோனி பிளயருடன் அவர் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்ட போது என்ன விடயங்கள் குறித்து இருவரும் பேசுவர் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை.

இந்த விஜயத்தின் போது புஷ் முதற் தடவையாக இரண்டாவது எலிசபெத் மகாராணியையும் நேரில் சந்தித்துப் பேசுவார். மகாராணி அவருக்கு பக்கிங்காம் அரண்மனையில் மதிய உணவு அளிப்பார்.

பிரிட்டிஷ் விஜயத்தை முடித்துக் கொண்டு அதிபர் புஷ் அங்கிருந்து ஜி-8 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இத்தாலித் தலைநகர் ரோமுக்குச் செல்வார். (ம-7-9)

# உலக அரங்கில்

## இத்தாலி ஆதரவு

அமெரிக்காவின் ஏவுகணை எதிர்ப்புச் சோதனைக்கு இத்தாலி ஆதரவு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்தச் சோதனைக்கு ஆதரவு தெரிவித்துள்ள முதலாவது ஐரோப்பிய நாடு இத்தாலி ஆகும்.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் இத்திட்டம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனவே தவிர இதுவரை அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை. ஆனால் அமெரிக்காவின் இந்தத் திட்டம் மிகவும் பயனுள்ளதென்று இத்தாலிய அரசின் பேச்சாளர் ஒருவர் கூறினார். (ம-7-9)

# சைக்கிளில் நாடாளுமன்றம் செல்லும் நைஜீரிய அமைச்சர்

நைஜீரியாவின் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஒஜோ மடுகே நாடாளுமன்றத்துக்கு சைக்கிளிலேயே சென்று வருகின்றார்.

போக்குவரத்துக்கு சைக்கிள்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மையை பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காகவே தான் இவ்வாறு சைக்கிளில் நாடாளுமன்றம் செல்வதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அவர் நாடாளுமன்றத்துக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது வீதி விபத்து ஒன்றில் இருந்து மயிரிழையில் தப்பித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதியில் எதிரெதிரே வந்த காரும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. அந்தச் சமயத்தில் அமைச்சர் சைக்கிளில் வீதியை விட்டு ஒதுங்கிச் சென்று கொண்டிருந்ததால் விபத்தில் சிக்கிக் கொள்ளாமல் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7-9)

# அமெரிக்காவில் எவ்.பி.ஐயின் கணனிகள் திருட்டு

வாஷிங்டன்,ஜூலை20

அமெரிக்காவின் எவ்.பி.ஐ.சட்ட அமுலாக்கற்பிரிவு ஆகியவற்றிலிருந்து கடந்த சில வருடங்களில் 184 சிறிய ரகக் கணனிகளும் (Laptop Computers) 449 நவீன ஆயுதங்களும் களவாடப்பட்டும் தொலைந்துமிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

184 கணனிகளில் 13 கணனிகள் திருடப்பட்டும், ஏனையவை தொலைந்துமிருப்பதாகவும், 449 ஆயுதங்களில் 184 ஆயுதங்கள் களவாடப்பட்டதாகவும் அறியப்பட்டுள்ளது.

களவாடப்பட்ட கணனிகளில் ஒரு கணனியில் இரண்டு முக்கிய விவகாரங்கள் தொடர்பான புலனாய்வுத தகவல்கள் சேகரிக்கப்பட்டிருப்பதாகவும். ஏனைய 3 கணனிகளில் வேறு பல முக்கிய தகவல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# செயற்கை இதயம் பொருத்தப்பட்டவர் அதிசயிக்கும் விதத்தில் குணமாகிறார்

லூயிஸ்விலே,ஜூலை20

உலகில் முதல் தடவையாக சுயமாக இயங்கும் செயற்கை இதயம் பொருத்தப்பட்ட நபர் எதிர்பார்த்ததை விட விரைவாகவும், ஆரோக்கியமாகவும் குணமடைந்து வருவதாக அவருக்கு சத்திரசிகிச்சையை மேற்கொண்ட மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர். அடுத்து வரும் இரண்டொரு வாரங்களில் மற்றொருவருக்கு செயற்கை இதயத்தை மாற்றீடாகப் பொருத்த உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதயத்தின் செயற்பாடுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டு அதன் காரணமாக, ஈரல், சிறுநீரகங்கள், நுரையீரல் ஆகிய உள் உறுப்புகள் பாதிப்படைந்து இறக்கும் நிலையில் இருந்த 50 வயது ஆண் ஒருவருக்கு கடந்த 2ஆம் திகதி செயற்கை இதயம் பொருத்தப்பட்டது.

இதய மாற்றீடுக்குப் பின்னர் தற்போது அந்த நபர், ஒருவருடத்தின் முன்பிருந்த ஆரோக்கிய நிலையை அடைந்துள்ளதாக, சத்திரசிகிச்சையை மேற்கொண்ட ஸமன் கிறே, ரொபேர்ட் டவுலிங ஆகிய இரு மருத்துவ நிபுணர்களும் தெரிவித்துள்ளனர்.

செயற்கை இதயம் பொருத்தப்பட்டாலும், இந்த நபரது ஏனைய உள் உறுப்புகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்ததால் அவர் 60 நாள்களுக்கு மட்டுமே உயிர்வாழ முடியும் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் செயற்கை இதயம் சிறப்பாகச் செயற்படுவதால், ஈரல், சிறுநீரகங்கள், நுரையீரல் ஆகியவை வழமையான நிலைக்குத் திரும்பி வருகின்றன.

ஆகவே, அவர் ஒரு வருட காலத்திற்கும் அதிகமாக உயிர் வாழக் கூடும் என்று மருத்துவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதயம் பொருத்தப்பட்ட ஆரம்பத்தில், இதயப் பகுதியில் இரத்தப் பெருக்கு நுண் அங்கித் தொற்று போன்ற இடையூறுகள் இருந்ததாகவும் -

ஆனால் தற்போது அத்தகைய இடையூறுகள் நீங்கிவிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

தன்னிச்சையான செயற்கை இதயம் பொருத்தப்பட்ட முதல் நபர் ஆரோக்கியமாக இருப்பதையடுத்து மற்றொரு நபருக்கும் அத்தகைய செயற்கை இதய மாற்றீடு சத்திர சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்த மருத்துவ நிபுணர்கள், அடுத்த சில வாரங்களில் அந்தச் சத்திர சிகிச்சை நடக்க உள்ளதாகவும் கூறினார். (ஒ)

# மியான்மரில் அரசியல் கைதிகள் 11பேர் விடுதலை

ரங்கூன்,ஜூலை20

மியான்மரில் இராணுவ ஆட்சியாளர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 11 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இராணுவ அரசுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில், மியான்மரில் ஜனநாயகத்துக்காகக் கடுமையாகப் போராடி வரும் தலைவியான ஆங்சாங் சூய்யின் தேசிய ஜனநாயக லீக் கட்சியின் முக்கிய தலைவரும் ஒருவராவார்.

நல்லெண்ண அடிப்படையில் இவர்கள் விடுவிக்கப்படுவதாக இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7-9)

# அமெரிக்க அதிபர் வளர்க்கும் பூனையின் பெயர் 'இந்தியா'

வாஷிங்ரன்,ஜூலை20

தான் செல்லப் பிராணியாக வளர்க்கும் பூனைக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் 'இந்தியா' என்று பெயர் சூட்டியுள்ளார்.

அமெரிக்க அரசின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அதிபர் புஷ் தொடர்பான குறிப்புக்களில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேசமயம்,

அமெரிக்காவில் வாழும் இந்திய சமூகத்தினர் இணையம் ஊடாக இது குறித்து சர்ச்சையை உருவாக்கியுள்ளனர்.

புஷ்ஷின் இந்தச் செயல் இந்தியர்களின் சுயமரியாதையையும் இந்தியாவின் மதிப்பையும் சீர்குலைப்பதாகவும் உலக அளவில் இந்தியர்கள் இது தொடர்பாக அதிபர் புஷ்ஷுக்கு கண்டனங்களைத் தெரிவிக்க வேண்டும் என்றும் இணையத் தளங்களின் ஊடாக வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

அதிபர் தேர்தலில் அமெரிக்காவில் வாழும் இந்திய சமூகத்தினர் புஷ்ஷுக்கு ஆதரவளித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# உலகக் கிண்ண கிரிக்கெட்டுக்கு கனடா அணி தகுதி

ரொறன்ரோ,ஜூலை20

2003ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு கனடா நாட்டு கிரிக்கெட் அணி தகுதி பெற்றுள்ளது.

உலகக் கிண்ண போட்டிகளில் ஆடுவதற்கான தகுதிப் போட்டியான ஐ.சி.சியால் நடத்தப்படும் ஐ.சி.சி. கிண்ணச் சுற்றுப்போட்டியில் மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் வென்றதன் மூலம் கனேடிய அணி இந்தத் தகுதியைப் பெற்றுள்ளது.

# இத்தாலியில் குண்டு வெடிப்பு

ரோம்,ஜூலை20

இத்தாலிய தலைநகர் ரோமிலுள்ள தொலைக்காட்சி நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் தொலைக்காட்சி நிலையம் இத்தாலியப் பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. காயமடைந்த பெண் இந்த நிறுவனத்தின் செயலாளராவார்.

பொதி செய்யப்பட்டு வந்த ஒளிநாடா ஒன்றைப் பிரித்தபோது அதற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது.

ஜி-8 நாடுகளின் தலைவர்கள் கூட்டம் ரோமில் நடைபெற இருக்கும சமயத்தில் இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளமை அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. (ம-7-9)

# ஆக்ரா மாநாடு தோல்வியல்ல: பாக்.வெளிவிவகார அமைச்சர்

இஸ்லாமாபாத்,ஜூலை20

ஆக்ராவில் இடம்பெற்ற மாநாடு முடிவு எதையும் காணாது நிறைவுற்றபோதும் அது தோல்வி அடையவில்லை என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் சத்தார் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையில் முன்னர் இடம்பெற்ற பேச்சுக்கள் கடந்த இரு வருட காலமாக தேக்க நிலையில் இருந்து வந்தது.

தற்போது வருங்காலப் பேச்சுவார்த்தைக்கான வழியை ஏற்படுத்துவதில் ஆக்ரா மாநாடு வெற்றி கண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கூட்டு அறிக்கை எதையும் விடுக்க முடியாத அளவுக்கு இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் முறிவுற்றது தெரிந்ததே. (ம)

# புஷ்ஷின் அலுவலகத்தில் சேர்ச்சிலின் உருவச் சிலை

## பிரிட்டன் கடனாக வழங்கியது

வாஷிங்ரன்,ஜூலை20

இரண்டாம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சிலின் மார்பளவு சிலை ஒன்று அமெரிக்க அதிபர் புஷ்ஷின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

புஷ்ஷின் அலுவலகத்தில் ஏற்கனவே ஆபிரகாம் லிங்கன், ஐஸன் ஹோவர் ஆகியோரின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அந்தச் சிலைகளுடன் தற்போது சேர்ச்சிலின் சிலையும் இணைந்துகொண்டுள்ளது.

சேர்ச்சிலின் இந்தச் சிலை 55 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலச் சிற்பி ஜேக்கப் எஸ்டினால் வடிவமைக்கப்பட்டது. இது பிரிட்டிஷ் அரசின் கலை சேமிப்பிலிருந்தது. தற்போது இந்தச் சிலையை பிரிட்டிஷ் அரசு அமெரிக்காவுக்கு கடனாக வழங்கியுள்ளது.

புஷ்ஷின் பதவிக் காலம் வரை இந்தச் சிலை அவரது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். புஷ் பதவியிலிருந்து விலகும் போது அது பிரிட்டனிடம் மீண்டும் ஒப்படைக்கப்படும்.

"வின்ஸ்டன் சேர்ச்சில் ஒரு பெரும் தலைவர். அவரது சிலை எனது அலுவலகத்தில் இருப்பது எனக்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது" என்று அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். (ம)

# விண்வெளிக்கு இயந்திர மனிதன்

நாஸா,ஜூலை20

சூரிய மண்டலத்தில் பரவியுள்ள வாயுக்களின் மாதிரிகளைச் சேகரிக்க இயந்திர மனிதனை அமெரிக்க 'நாஸா' நிறுவனம் விண்வெளிக்கு அனுப்புகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி இந்த 'இயந்திர மனிதன்' விண்வெளிக்கு செலுத்தப்படவுள்ளது.

15 லட்சம் கிலோ மீற்றர்கள் பயணித்து இயந்திர மனிதன் வாயுக்களின் மாதிரிகளை சேகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# 2விமானிகள் பலி!

கலிபோர்னியாவில் எப்.16 ரக யுத்த விமானம் விபத்துக்குள்ளானதில் இரு அமெரிக்க விமானிகள் பலியாகினர்.

விமானத்தை பரிசோதிக்கும் பணியில் செவ்வாயன்று இவர்கள் ஈடுபட்டிருந்த வேளையிலேயே அது விபத்துக்குள்ளானது. (ம)

# ஒரிஸாவில் வெள்ளத்தால் 50பேர் பலி!

புதுடில்லி,ஜூலை20

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையை அடுத்து அங்கு பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தில் சிக்கி இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளனர். லட்சக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். 4 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. 14 ஆயிரம் வீடுகள் கடும் சேதம் அடைந்துள்ளன.

வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவர்களுக்கு ஹெலி மூலம் உணவுப் பொருள்கள் போடப்பட்டு வருகின்றன. (ம)

# எதிரணி பொதுத்திட்டத்தை தயாரிக்க

# ஜே.வி.பியினர் ஐ.தே.கவுடன் இணக்கம்

கொழும்பு, ஜூலை 20
எதிர்க்கட்சிகள் அனைத்துக்கும் பொதுவான உடன்பாடு ஒன்றுக்கு வரும் விதத்தில் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியிடம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது.

மேற்படி உடன்படிக்கையைத் தயாரிக்கும் போது சகல எதிர்க்கட்சிகளதும் கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டே உருவாக்கப்பட வேண்டுமென்று ஜே. வி. பி. வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில், புதன்கிழமை மாலை ஜே. வி. பியின் உயர்மட்டக் குழுவினர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர்.

ஜே. வி. பி. சார்பில் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச மற்றும் நந்தன குணதிலக்க, அநுர திஸாநாயக்க ஆகியோரும், ஐ.தே.க சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரதித் தலைவர் கருஜயசூரிய எதிர்க்கட்சிப் பிரதம கொரடா டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார, டிரோன் பெர்னாண்டோ ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எதிர்கொள்ள வேண்டிய பொதுவான பிரச்சினைகளின் போது ஜே. வி. பி. ஏனைய எதிரணியினருடன் ஒன்றுபட்டே செயற்படுவதாகவும் ஆனால் ஐ. தே. க. தனியாக முன்னெடுக்கும் பணிகளுக்கு ஒத்துழைக்க முடியாது எனவும் ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச அங்கு எடுத்துக் கூறினார்.

ஆனால், தற்போது எழுந்துள்ள சூழ்நிலைகளை அவதானிக்கும் போது சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டுபொதுவான உடன்பாடு ஒன்றுக்கு வரவேண்டிய அவசியம் தங்களால் உணரப்பட்டிருப்பதாகவும் அதற்குரிய நடவடிக்கைகளை சகல எதிர்க்கட்சிகளும் கூடித் தீர்மானிக்க வேண்டும் எனவும் விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார்.

இதன் பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை காலை எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்தி ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு இரு தரப்பினரும் உடன்பாடு கண்டுள்ளனர்.

அத்துடன், ஜே.வி.பி. எதிர்க்கட்சியிலுள்ள 115 எம்பிக்களதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு, முடிந்தால் அரசாங்கத் தரப்பு எம்.பிக்கள் சிலரது ஆதரவையும் பெற்றுச் சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக நீதிமன்றம் செல்லத் திட்டமிருப்பதாக விமல் வீரவன்ச எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துரைத்து அதற்கு ஐ. தே.க. வின் ஒத்துழைப்பையும் கோரினார்.

அதற்கு பூரண ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவதாக ரணில் விக்கிரமசிங்க ஜேவின் விபிடம் உறுதியளித்தது.ட. இவ்விடயம் தொடர்பாக இன்றுகூடும் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுக்கவும் இணக்(கம் தெரிவித்தார். க-15)

## அறநெறிக் கல்வி போதனை விரைவில்வலி. மேற்கில் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
வலி. மேற்கில் உள்ள அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அறநெறிக் கல்வியைப் போதிக்கும் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது என வலி. மேற்குப்பிரதேச சபைத் தலைவரும், வலி. மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபைப் போஷகருமான ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

இதற்காகச் சமயத் தலைவர்கள், அரச அதிகாரிகள், சமயப் பெரியார்கள் அடங்கிய கலந்துரையாடல் ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது என்றும்—

அறநெறிப் பாடசாலைகளுக்குப் போதியளவு நிதியை ஒதுக்கீடு செய்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும்—திரிலோகநாதன் தெரிவித்தார். (க-7-9)

### யாழ்- பருத்தித்துறைக்கு இடையில்

## நகரில் பிறவுண் வீதியூடாக பஸ்சேவை ஆரம்பிக்க முடிவு

### பல்கலை, தொழில்நுட்ப மாணவருக்காக

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் நன்மைகருதி, யாழ்ப்பாணத்துக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் யாழ். நகர் பிறவுண் வீதியூடாக விரைவில் பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இராணுவ அதிகாரிகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் ஆகியோருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தொழில் நுட்பக் கல்லூரிகளின் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் ந. யோகராஜன் அறிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக பிறவுண் வீதியில் — கலட்டிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பிறவுண்வீதியூடாககோண்டாவில் வரைக்கும் 808 இலக்க பஸ் சேவை இடம்பெறும். பின்னர் இந்தச் சேவை பருத்தித்துறைக்கும் நீடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-7)


## நீங்கா நினைவில் நான்காண்டு!

தோற்றம்
16 – 06 – 1930



மறைவு
02 – 08 – 1997

அமரர்
வைரவப்பிள்ளை சிவக்கொழுந்து
(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர்,
புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி)

திதி:- 20-07-2001 ஆடி அமாவாசை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவு கூரும்:
அன்பு மனைவி
திருமதி ஜெகசோதி சிவக்கொழுந்து
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி.

(89886)


## விளையாட்டு விழா

தென்மராட்சி, ஜூலை 20
புலோலி மேற்கு கூவில் தீபஜோதி சனசமூக நிலைய 20 ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு நிலைய மைதானத்தில் ஆ. தம்பிமுத்து தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி கலந்து கொள்வர். (க-117)

## மருதங்கேணியில் ஆசிரிய சங்க கிளை அங்குரார்ப்பணம்

வடமராட்சி, ஜூலை 20
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மருதங்கேணிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே. சிவராசா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரட்ணம் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் திருமதி க. ஜெயராஜா, துணைப் பொதுச் செயலாளர் அ. ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்,

தற்பொழுது வடமராட்சி கிழக்கில் இயங்கும் 5 பாடசாலை ஆசிரியர்களுடன் தற்காலிகமாகக்கரவெட்டி, பருத்தித்துறைக் கோட்டங்களில் இணைக்கப்பட்ட மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-173-182)

## ஆஸ்பத்திரியில் இரவு வேளையில் நாய்கள் அழிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ். போதனா வைத்திய சாலையில் தொல்லை கொடுத்து வந்த கட்டாலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளன.

பகல் வேளையில் காண முடியாத கட்டாக்காலி நாய்கள் இரவில் அங்கு நடமாடி, அவசர சிகிச்சைகளுக்காக விடுதிகளுக்குச் செல்லும் டாக்டர்கள் மற்றும் பணியாளர்களைத் துரத்தித் துரத்தி தொந்தரவு கொடுத்து வந்தன. இது குறித்து நிர்வாகத்தினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து பணிப்பாளரின் பணிப்பின் பேரில், ஆஸ்பத்திரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இரவு நேரத்தில் விசேடமா அங்கு வருகை தந்து— அவரின் மேற்பார்வையில்— கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

கடந்த இருதினங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட ''வேட்டை'' யைத் தொடர்ந்து நாய்களின் தொல்லை ஓரளவு குறைந்துள்ளதாகப் பணியாளர்கள் குறிப்பிடுகின்றனர். (க)

### சிவசுப்பிரமணிய சுவாமியுடன் பக்தர்கள்

## திருவடிநிலை கடற்கரை சென்று தீர்த்தமாட படையினர் அனுமதி

சுழிபுரம், ஜூலை 20
சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆடி அமாவாசை தீர்த்தம் ஆடுவதற்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பக்தர்கள் புடைசூழ திருவடிநிலை கடற்கரைத் தீர்த்தக் கரைக்கு எழுந்தருளவுள்ளார்.

கடற்கரைப் பகுதிக்குச் செல்ல கோயில் நிர்வாகத்தினர் கடற்படையினரின் அனுமதியைப் பெற்றுள்ளனர்.

சுவாமியுடன் சென்று கடலில் தீர்த்தம் ஆடும் நிகழ்வு சென்ற ஆண்டும் நடைபெற்றது, இந்த ஆண்டும் கடற்படையினரின் அனுமதி கிடைத்துள்ளது. (க-28)

### வாழைச்சேனை கல்மடுவிலுள்ள

## அகதி முகாம் இளைஞர் ஒருவர் நள்ளிரவு வந்த சிலரால் கைது!

### காரணம் கேட்ட மக்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 20
வாழைச்சேனை கல்மடுவிலுள்ள அகதி முகாமுக்குள் நள்ளிரவு நேரத்தில் நுழைந்த இனந்தெரியாதோர் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு இளைஞர் ஒருவரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கல்மடுவிலுள்ள அகதி முகாமில் புனாணை, ஊத்துச்சேனை ஆகிய கிராம மக்கள் தங்கியுள்ள முகாமுக்குள் புகுந்த இனந்தெரியாதோர் குடிசைகளுக்குள் உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பி ஆண்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் பின்னர் வே. பாலச்சந்திரன் (16 வயது) என்ற இளைஞனைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர். இவரைக் கேட்டே பொதுமக்கள் தாக்கப்பட்டதாக அகதிகள் கூறுகின்றனர்.

நன்கு தமிழில் உரையாடிய இவர்களில் ஒரு சிலர் மட்டும் கொச்சைத்தமிழில் பேசியதாகவும் அகதிகள் தெரிவித்தனர். (க)

## மாணவனின் சைக்கிள் திருட்டு

அச்சுவேலி மத்திய கல்லூரியில் பாடசாலை நேரத்தில் மாணவனின் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

சைக்கிள் திருட்டு போனது குறித்து அச்சுவேலிப் பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து கல்லூரியில் கல்விகற்று வரும் மாணவர் ஒருவரின் சைக்கிளே திருட்டுப் போனதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-11)

## பனம்பொருள் அரைக்கும் ஆலை வதிரியில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையும் வதிரி அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து வதிரியில் பனம்பொருள் அரைக்கும் ஆலை ஒன்றை ஆரம்பித்துள்ளன.

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எஸ்.கோகுலதாசன் இந்த ஆலையை கடந்த 13 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்தப் பனம் பொருள் அரைக்கும் ஆலைக்கு பனை அபிவிருத்திச் சபை5லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளது (க-4).

உதயன்

## இது நீதியா?

ஸ்ரீலங்காப் படையினர் வடக்கு, கிழக்கில் புரியும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல்வேறு மனித உரிமைகள் அமைப்புகள் அவ்வப்போது கண்டனம் தெரிவிக்கத் தவறுவதில்லை.

அதுவும் தவறு செய்யும் - கிரிமினல் குற்றம் புரியும் - படையினர் நீதியின் முன்நிறுத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்று சர்வதேச அமைப்புகள் பலவும் குறைகூறி வருகின்றன.

இத்தகைய நிலைமையில் கண்துடைப்புக்காக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை 'வழக்கு, செம்மணிப் புதைகுழி வழக்கு, மிருசுவில் புதைகுழி வழக்கு என்று ஓரிரு விடயங்களில் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து தனது பெயரைக் காப்பாற்றிக் கொள்ள அரசு முயலாமலும் இல்லை.

ஆனால் 'ஆசாரி இடங்கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்காதது போல' சட்டத்திலிருக்கும் ஓட்டைகளைப் பிய்த்துக்கொண்டு இத்தகைய வழக்குகளின் எதிரிகள் - அல்லது சந்தேகநபர்கள் - தாங்கள் தப்பிக்கக் கூடிய சூழ்நிலையை இலகுவாகத் தோற்றுவித்துக்கொண்டு, மாறுவதற்கு கொழும்பிலுள்ள மேன்நிலை நீதிமன்றங்கள் இலகுவாக இடமளித்து வருவது வடக்கு - கிழக்குத் தமிழர்கள் மத்தியில் நமது நீதித்துறை குறித்து மேலும் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்து வருகின்றன.

நீதிமன்றத் தீர்ப்புகளை - உத்தரவுகளை - விமர்சிப்பதோ அல்லது அதன் மூலம் நீதிமன்றங்களை அவமதிப்பதோ எமது எண்ணமல்ல. ஆனால் அதேசமயம், ஒட்டுமொத்தமாக வடக்கு - கிழக்கு தமிழர்களின் எண்ணக் கிடக்கையை - அவர்களின் நெஞ்சத்தின் அவலக் குரலை - நீதிமன்றங்கள் வெறும் சட்டங்களின் பெயரால் நிராகரித்து, ஒதுக்கிவிடக் கூடாது என்பதை வெளிப்படுத்த வேண்டிய - பிரதிபலிக்கவேண்டிய - கடப்பாடும் பொறுப்பும் வடக்கிலிருந்து வெளியாகும் தினசரி என்ற முறையில் எமக்குண்டு.

நாற்பதாயிரத்துக்கும் அதிகமான படையினரைக் கொண்டு தனது முழுக் கட்டுப்பாட்டில் யாழ். குடாநாட்டை அரசு வைத்திருக்கின்றது. ஓர் அமைச்சர் உட்பட பல அதிகாரிகள் இங்கிருந்து கொண்டு செயற்படுகின்றார்கள். ஆனால் மக்கள் பாதுகாப்புக்கு என்ற பெயரில் கொடுக்கப்பட்ட ஆயுதங்களை வைத்துக்கொண்டு, படையினர் என்ற கோதாவில் வழங்கப்பட்ட சட்டப் பாதுகாப்பையும் பயன்படுத்தி, கிரிமினல் குற்றங்களை - கொள்ளை, கொலை, பாலியல் வல்லுறவுகளை - புரியும் படையினருக்கு மட்டும் [illegible]க்கு விசாரணைகளை இங்கு எ[illegible] காள்வதற்குப் பாதுகாப்பு இல்[illegible] என்று கூறுவது கேலிக்குரியதாகும்.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள், களுத்துறைச் சிறைச்சாலையில் பல தடவைகள் இடம்பெற்ற படுகொலைகள் - தாக்குதல்கள், பூஸாச் சிறைத் தாக்குதல்கள், பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலைகள் என்று தெற்குச் சிறைகள், தடுப்பு முகாம்களில் தமிழ்க் கைதிகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட - இழைக்கப்படுகின்ற - படுகொலைத் தாக்குதல்கள் ஏராளம். தெற்குச் சிறைகளில் இன்னமும் பாதுகாப்பில்லாத நிலையில்தான் தமிழ்க் கைதிகள் வைக்கப்பட்டுள்ளார்கள்; அவர்களுக்கு எதிரான வழக்குகள் அங்குதான் தொடர்ந்து நடக்கின்றன.

ஆனால் வடக்குச் சிறைகளில் இராணுவ, பொலீஸ் கைதிகளுக்கு எதிராகப் பெரும் ஆபத்தான தாக்குதல்கள் ஏதும் நடத்தப்படவில்லை; நடத்தப்பட வாய்ப்புமில்லை - இத்துணை பாதுகாப்புக்கு மத்தியில்.

எனினும் பாதுகாப்பின்மை என்ற காரணத்தைக் காட்டி மேற்படி கொடூரங்களைப் புரிந்த சந்தேகநபர்கள் வழக்குகளை இலகுவாகத் தெற்குக்கு மாற்றுவதும் - அதன் மூலம் இங்குள்ள சாட்சிகள் தெற்குக்கு வராத நிலையில் - வழக்குகளிலிருந்து இலகுவாகத் தப்புவதற்கு வாய்ப்பு ஏற்படுவதும் நீதிதேவதையின் பக்கம் கோடாத தன்மைக்கு இழுக்காகவே அமைந்திருக்கின்றது.

செம்மணிப் புதைகுழிப் படுகொலைகள், மிருசுவில் படுகொலைகள், மன்னார் பாலியல் வல்லுறவு ஆகியவை தொடர்பான வழக்குகள் வரிசையாகத் தெற்குக்கு மாற்றப்படுவது வடக்கு - கிழக்கு தமிழர் மனதில் நீதித்துறை குறித்து ஓர் அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதை கொழும்பிலிருந்து கொண்டு உத்தரவுகளை வழங்கும் நீதித்துறை அதிகாரிகள் கவனத்தில் கொள்வது நல்லது.

# பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு பொதுமக்கள் கொள்வனவு செய்த காணி

## அரச அதிபரிடம் உறுதி கையளிப்பு

தென்மராட்சி,ஜூலை20

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கென புதிய காணியொன்று பருத்தித்துறை டிப்போவுக்கு அருகில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் காணி கொள்வனவுக்கான நிதியை பிரதேச மக்கள் வழங்கியிருந்தனர்.

இக்காணிக்கான உறுதி கையளிப்பு நிகழ்வு கடந்த புதனன்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

முன்னாள் உதவி அரச அதிபர் க.முருகேசம்பிள்ளை இந்தக் காணிக்கான உறுதியை யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.பி.வேலாயுதம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், சுவாமி சித்ரூபானந்தா, யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-117)

# சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுடன் ஜனாதிபதி ஞாயிறன்று சந்திப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 22ஆம் திகதி சந்தித்துப் பேசவுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது சர்வஜன வாக்கெடுப்பை வெற்றி கொள்வது குறித்து ஜனாதிபதி அமைப்பாளர்களுடன் ஆராயவுள்ளார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சகல மாவட்ட அமைப்பாளர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் செயலாளர்களின் கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது. (க)

## சர்வஜன வாக்கெடுப்பு:

# மாவட்ட அடிப்படையில் இம்முறை வாக்குச் சீட்டுக்களில் மாற்றம்

கொழும்பு,ஜூலை20

அடுத்த மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக அச்சடிக்கப்படும் வாக்குச் சீட்டுக்களின் இரகசியத்தன்மையைப் பேணுவதற்காக மாவட்டங்களின் அடிப்படையில் சில சில மாற்றங்களுடன் வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கப்படவுள்ளன என்று அரச அழுத்தகர் நாயகம் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கும் பணி இன்னும் சில தினங்களில் முடிவடைந்து விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது போலி வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டதாக எதிர்க்கட்சிகள் முறைப்பாடு செய்திருந்ததும் அதனால் தேர்தல் ஆணையாளர் பெரும் நெருக்கடி நிலைக்கு ஆளாகியிருந்தார் என்பதும் தெரிந்ததே. (க)

## தென்மராட்சி மாணவர்கள் கவனத்துக்கு!

தென்மராட்சி,ஜூலை20

தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான வணிக, விவசாய பாட வினாடி - வினாப் போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், இணுவில் மத்திய கல்லூரியிலும் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-117)

## 'டிஸ்கவரி' கோவை மாயம்!

கொழும்பு,ஜூலை20

ரூபவாஹினி தொலைக்காட்சி மூலம் 'டிஸ்கவரி' நிகழ்ச்சியை ஒளிபரப்புவதற்காக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கும் 'டிஸ்கவரி' நிறுவனத்துக்கும் இடையில் 5 ஆண்டுகளுக்கு ஒளிபரப்பும் உரிமம் தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோவை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் இருந்து காணாமற்போயுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'டிஸ்கவரி' (DISCOVERY) என்ற ஆங்கிலப் பதத்தின் அர்த்தம் கண்டுபிடிப்பு என்பதாகும். தற்போது இந்த 'டிஸ்கவரி' ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்கள் அடங்கிய கோவையை இப்போது 'கண்டுபிடிக்க' (DISCOVER) வேண்டியுள்ளதாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

'டிஸ்கவரி' நிகழ்ச்சியை ஒளிபரப்புவதற்கு மாதாந்தம் 2 மில்லியன் ரூபாவை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் 'டிஸ்கவரி' நிறுவனத்திற்கு வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (க)

## சிமெந்து ஊழியர் சம்பளக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூலை20

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் மார்ச் மற்றும் ஏப்ரல் மாத சம்பளக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.வர்த்தக வங்கியில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## குடாநாட்டில் வர்த்தக நிலையங்கள் இன்று மூடப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை20

ஆடி அமாவாசையை ஒட்டி இன்று வெள்ளிக்கிழமை யாழ்.குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருக்கும் என்று அவ்வப்பகுதி வணிகர் கழகங்கள் பாவனையாளர்களுக்கு அறிவித்துள்ளன. (க-173)

## நாளை

ஆடி 5
சனிக்கிழமை
திதி: பிரதமை
முன்னிரவு 11.45 வரை.
நட்சத்திரம் : பூசம்
முன்இரவு 11.20 வரை.
சுபநேரம் : 3.01 - 4.31
ராகுகாலம் : 9.01 - 10.31
(பழைய நேரப்படி)

## நெல்லியடியில் புதிய சந்தைக் காணி நாளை கையளிப்பு

வடமராட்சி,ஜூலை20

நெல்லியடியில் புதிய சந்தை அமைக்கப்பட்டுள்ள 20 பரப்புப் காணி கரவெட்டி பிரதேச சபையிடம் நாளை சனிக்கிழமை சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு வேதாரணியம் ஆதிவார மடத்துக்குச் சொந்தமான இந்தக் காணியைப் பராமரித்துவரும் தர்மகர்த்தா சபையினர் அதனை நாளை கையளிப்பார்கள்.

99 வருட குத்தகை அடிப்படையில் இக்காணி வழங்கப்படுகிறது. (க-173)

## உதயவாக்கு

உனது விடுதலைக்கு வழி பிறர் வசமன்று; அது உன் வசமே உள்ளது.

- *புத்தர்.*

# நாட்டு நடப்பு

## போதை - XI

'போத்தலை வையடா கீழை
போகட்டும் கதை சொல்லிறன்'
'எத்தனை தடவை மச்சான்
எடுத்தெடுத்துக் கீழை வைக்க...?'
'இப்ப போன மொட்டையர்தான்
என்னைப் பெத்த அப்பனடா'
'அப்பொருத்தர் அரை அடித்தார்...?'
'அவர்தான் என் அம்மானடா!'

- *விகடகவி* -

## சர்வஜன வாக்கெடுப்பை தெளிவுபடுத்தி

# ஆளுங்கட்சி பிரதான நகரங்களில் 25 கூட்டங்களை நடத்தும்!

கொழும்பு,ஜூலை20

சர்வஜன வாக்கெடுப்பை முன்னிட்டு பிரதான நகரங்களில் 25 விளக்கக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம்வகிக்கும் ஏனைய கட்சிகளும் இக் கூட்டங்களில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளன என்றும், எதிர்க்கட்சியினரில் சிலரின் ஆதரவையும் இதற்காகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குதல், தொகுதி ரீதியான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் போன்ற தேர்தல் சட்டங்களைத் திருத்தியமைத்தல் என்பன தொடர்பாகவும் இக் கூட்டங்களில் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (க)

## விவசாய ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்கமுடியாத காரணத்தால் திங்கட்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (க-6-4)

## எரியுண்ட பெண் மரணமானார்

யாழ்ப்பாணம்,ஜூலை20

எரிந்துகொண்டிருந்த 'குக்கரு'க்கு எண்ணெய் விட்டபோது பரவி வியாபித்த நெருப்பில் எரிந்து காயமடைந்ததாகத் தெரிவித்து, உடல் முழுவதும் கருகிய நிலையில் கடந்த 14ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் நான்கு தினங்களின்பின் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

கொக்குவில் நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்தவரான யோகலிங்கம் கௌசலா (வயது 25) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்று இடம்பெற்ற மரணவிசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-15)

## விற்பனை நிலையம்

வர்த்தகத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையம் அச்சுவேலியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலிப் பகுதிப் பாவனையாளர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு வர்த்தகத் தொழில் கூட்டுறவுச் சங்கம் இந்த விற்பனை நிலையத்தை அச்சுவேலி பிரதான வீதி, காலனை ஒழுங்கைச் சந்தியில் ஆரம்பித்துள்ளது. (க-11)

## வடமராட்சி பேக்கரி உரிமையாளருக்கு பிணை அனுமதி

வடமராட்சிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடான வகையில் வெதுப்பகம் (பேக்கரி) நடத்திவந்த, வெதுப்பக உரிமையாளர் ஒருவரை 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல பருத்தித்துறை மாவட்ட நீதிவான எஸ்.ஏ. ஈ.ஏகநாதன் அனுமதித்தார்.

நெல்லியடிப் பகுதியில் அமைந்திருந்த இந்த வெதுப்பக உரிமையாளருக்கு எதிராக, அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் மு.ரவிச்சந்திரன், அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின் போது நீதிவான் அரச செலவாக 500 ரூபாவைச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

இருவாரகாலத்தினுள் குறிப்பிட்ட வெதுப்பகத்தின் சுகாதாரச் சீர்கேட்டை அகற்ற வேண்டும் என்றும் நீதிவான் கடுமையாக எச்சரித்தார். (க-109)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



வெடிக்கத்தக்க பொருள்கள் - மோட்டார் எறிகணை

# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 125ஆம் ஆண்டு நினைவு மலர்

## ஆவணங்களைச் சேகரிப்பதில் விழாக்குழு மும்முரம்

சுழிபுரம், ஜூலை20

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 125 ஆண்டு நிறைவு விழாவின் நினைவாக கல்லூரியின் வரலாற்றுச் சிறப்புடன் விளங்கச் செய்யும் விழா மலர் அச்சிடப்படவுள்ளது.

விழா மலர்க்குழுவினர் கல்லூரி வரலாறு, ஆவணங்கள் மற்றும் முக்கிய தகவல்களைத் திரட்டிவருகின்றனர்.

கல்லூரியின் புகழ்பூத்த மாணவர்கள், ஆசிரியர்கள் வரலாறு போன்ற விபரங்களைத் திரட்டி வெளியிடுவதன் மூலம் மலர் கல்லூரியின் நினைவுச் சின்னமாக அமையும் வகையில் முழுத தகவல்களும் திரட்டப்பட்டு வருகின்றன. கல்லூரி சம்பந்தமான ஆவணங்களை வைத்திருப்போர் அவற்றைத் தந்து உதவுமாறு மலர் வெளியீட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-28)

# நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 - 12 - 1934 | 03 - 07 - 1997 |

## அமரர் வீரகத்தி இராசதுரை

திதி:- 20-07-2001

எங்கள் வாழ்வு மலர வழிகாட்டியாய்
இருந்து எம்மை விட்டுப் பிரிந்த
உங்களை என்றும் மறவோம்!

முத்தமிழ் வீதி, கொட்டடி. (90211) மனைவி, பிள்ளைகள்.

# 3ஆவது நினைவு அலைகள்



| | |
|---|---|
| 02 - 11 - 1927 | 22 - 07 - 1998 |

முன்னாள் மில்க்வைற் அதிபர், சிவநெறிப் புரவலர்,
சிவதர்மவள்ளல், தேச அபிமானி

## அமரர் கலாநிதி க.கனகராசா

அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

இ.விஜயகோபால்
*மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்*
*527, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(90231)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 - 04 - 1922 | 20 - 06 - 2001 |

## திருமதி செல்லையா செல்லம்மா

எத்தனை உறவுகள் எத்தனை மனிதர்கள் - அம்மா
நித்தமும் நாம் காணும் நிஜமற்ற தொடர்புகளே!
தத்துவப் பொருளாகி தாய்மையில் நிறைவான - அம்மா
உத்தம வாழ்வுகண்ட உங்களையும் மறப்போமா!
எங்கள் குடும்ப ஒளிவிளக்கே! உமது ஆன்மா உய்திபெற
இதயமுருகி இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

*'வரதலிங்கம் இல்லம்'*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

(90212)

### பிரதேச செயலர் ரீதியாகத் தலா ஒன்று என்ற அடிப்படையில்

# பின்தங்கிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை20

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பின் தங்கிய நிலையில் இருக்கும் கிராமம் ஒன்றைத் தெரிவுசெய்து சிறந்த முறையில் அபிவிருத்தி செயவதற்கு கிராம அபிவிருத்தித் திணைககளம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இலகுவாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் - எவரது உதவிகளும் கிடைக்காமல இருக்கும் - பூகோள ரீதியாகப் பின் தங்கியிருக்கும் கிராமம் ஒன்றைத் தெரிவுசெய்து தமக்கு அனுப்பி வைக்குமாறு கிராம அபிவிருத்தித் திணைக்களம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளது.

பின் தங்கிய கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு இலகுவாக அந்தக் கிராமங்களில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை, அவர்கள் செய்யும் தொழில் ரீதியான விவரம், விதவைகளின் விவரம், சிறுவர் பாடசாலைகளின் விவரம், பாடசாலை செல்லாத மாணவர்களின் விவரம், வீதிகள் புனரமைப்பு, பொதுக்கட்டடத் திருத்தங்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டி-

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கிராம அபிவிருத்தித் திணைகளப் பணிப்பாளருக்குக் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு யாழ்மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.செல்வரட்ணம் தெரிவித்தார்.

(க-6)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை20

வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரிய குளம் சந்திக்கு அருகிலுள்ள டி.எம்.ஐ. கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

(க-4)


*மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்*
நடத்தும்
**கண்பார்வை பரிசோதனை / பல் வைத்திய ஆலோசனை**
**இலவச முகாம்**

We Serve

2001/2002
306 B SRI LANKA
SERVE TODAY FOR A BETTER TOMORROW

*காலம்:* 22.07.2001 (ஞாயிறு) காலை 8.00 - 11.00 மணிவரை
*இடம்:* மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
(யாழ். பிரதான வீதி, மானிப்பாய்)

*கண்பார்வை பரிசோதனை மேற்கொள்பவர்:*
யாழ்.போதனா வைத்தியசாலை கண்பிரிவு சிரேஷ்ட வைத்திய அதிகாரி
**வைத்திய கலாநிதி (செல்வி) M.சரவணமுத்து அவர்கள்**

*பல் வைத்திய ஆலோசனை வழங்குபவர்:*
யாழ்.போதனா வைத்தியசாலை - பல் வைத்தியப் பிரிவு
(பல் சத்திர) **வைத்திய கலாநிதி A.ஞானமூர்த்தி அவர்கள்**

முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின்படி பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதால் நேரத்துக்கு சமுகமளித்துப் பயன்பெறவும்.

*குறிப்பு:* மாணவர், முதியோர் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், தேவையேற்படின் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைபெற ஒழுங்கு செய்யப்படும்.

லயன் S.S.தங்கராஜா
(சேவைத்திட்டத் தலைவர்)

லயன் வைத்திய கலாநிதி
நவமலர் கனகரத்தினம் (கழகத் தலைவர்)

*சேவை பிரசுர உதவி:*

சிவாஸ் ஸ்ருடியோ,
951A, யாழ். வீதி,
மானிப்பாய்.

லக்கி ஹவுஸ்,
951/B,C, யாழ். வீதி,
மானிப்பாய். (C-17482)



# மக்கள் வங்கி வெற்றிக் கிண்ண துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி

**மக்கள் வங்கியின் 40 வருட மக்கள் சேவையின் நிறைவினைக் கொண்டாடும் முகமாக 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று யாழ்.பிரதேச மக்கள் வங்கி விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படவுள்ளது.**

**இச்சுற்றுப் போட்டிக்கு அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றின் விளையாட்டுக் கழகங்கள் விண்ணப்பிக்கலாம்.**

விண்ணப்ப முடிவு திகதி :- 26-07-2001
அணி ஒழுங்கு தேர்வு :- 27-07-2001, பிற்பகல் 4.30 மணிக்கு,
மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
கன்னாதிட்டி.

நுழைவுக் கட்டணம் :- ரூபா 150/-

விண்ணப்பப் படிவங்கள் பெறும் இடம் :- செயலாளர்,
யாழ்.பிரதேச மக்கள் வங்கி - விளையாட்டுக் கழகம்,
மக்கள் வங்கி,
ஸ்ரான்லி வீதிக் கிளை,
யாழ்ப்பாணம்.

யாழ்.பிரதேச மக்கள் வங்கி -
விளையாட்டுக் கழகம்,
மக்கள் வங்கி,
*செயலாளர்.* (C/17483) ஸ்ரான்லி வீதிக் கிளை, யாழ்ப்பாணம்.

# விரதங்களும் உணவுகளும் அவற்றின் மருத்துவப் பயன்பாடும்

தொன்மை வாய்ந்த சித்த ஆயுள் வேத வைத்திய நூல்களில் உடல் அமைப்புக்கள், அதன் செயற்பாடுகள் அந்தந்தப் பருவகாலங்களில் உடல் கிரிகைகளில் ஏற்படும் மாற்றங்கள், அந்தந்த வயதுகளுக்கு ஏற்படும் நோய்கள், நோய்களின் தன்மை, சாத்திய அசாத்திய தன்மைகள் என்பன பற்றியும் இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளை, உணவு வகைகளைப பாவிக்கும் அளவு, முறை, பாலம், பத்தியம், பக்க விளைவுகள் போன்ற பல அம்சங்களும் மெய்ஞ்ஞானத்தின் மூலம் கூறப்பட்டுள்ளன.

அவற்றில் பல இன்று விஞ்ஞான ரீதியாக விளக்கத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. மூலிகைகளின் மூலக்கூறுகளை ஒத்த பல பொருள்கள் விஞ்ஞானத்தின் மூலம் செயற்கையாகச் செய்யப்பட்டு தற்போது பாவனையில் இருந்து வருகின்றன. செயற்கையாகச் செய்யப்படுவற்றை விட இயற்கையாகப் பாவிக்கும் போது அதிக பலனும் பக்க விளைவுகளை ஏற்படுத்தாத தன்மையும் உண்டு என்பதை விஞ்ஞான பூர்வமாக ஏற்றுக் கொள்வதால் மேலைத்தேயத்தினர் தற்போது இயற்கை வைத்தியத்தில் அதிக நாட்டம் கொள்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஒரு வருடத்தில் வரும் பன்னிரண்டு மாதங்களையும் இரண்டு, இரண்டு மாதங்களாக ஆறு பிரிவாக சித்திரை - வைகாசி இள வேனில், ஆனி - ஆடி முதுவேனில், ஆவணி - புரட்டாதி கார்காலம், ஐப் பசி - கார்த்திகை கூதிர்காலம், மார் கழி - தை முன்பனி, மாசி - பங்குனி பின்பனி என வகுக்கப்பட்டு உள்ளது. அந்தந்தக் காலங்களுக்கும் உணவு நடைமுறை தவிர்க்க வேண்டியவை. கூடுதலாகப் பாவிக்கவேண்டிய சுவை உணவுகள் என விவரித்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் முதுவேனில் காலமாகிய ஆனி - ஆடி காலத்தை மட்டும் ஆராய்வோம்.

இக்காலத்தில் சூரிய வெப்பம் மிக அதிகமாக இருக்கும்; கடும் காற்று வீசிக்கொள்ளும். இதனால் குளம், கிணறு, நீர்நிலைகள் வற்றி வரட்சித் தன்மை அதிகமாகும். அதேபோல் உடலிலும் வெப்பம் அதிகமாக வாய்வுத் தன்மை, வாதத் தன்மை, அசதி, உளைவு அதிகமாகக் காணப்படும்.

இக்காலத்தில் அதிக உடல் உழைப்பில் ஈடுபடுவது, வெயிலில் செல்வது, மதுபானம் அருந்துவது தவிர்க்கப்பட வேண்டும். உப்பு, காரம், புளிப்புச் சுவையுடைய உணவுகளை அதிகம் உண்ணக்கூடாது.

இலகுவில் ஜீரணமாகக் கூடியதும் திரவத் தன்மையுடையதும் இனிப்புச் சுவையுடையதுமான உணவுகளை அதிகமாக உண்ணவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. (சலரோக நோயாளிகளுக்கு இது பொருந்தாது.)

இக்காலத்தில் இயற்கையில் அதிகமாகக் கிடைக்கக் கூடிய வாழைப் பழம், பலாப்பழம் அதிகம் உண்ணலாம். பலாப்பழம் அதிகமாக உண்பதானால் சுத்தமான தேன் சேர்த்துப பாவித்து வருவதானால் விரைவில் செமிக்கும் தன்மையும் உடலுக்கு கெடுதி செய்யாத தன்மையும் ஏற்படும். (சலரோக நோயாளி தவிர்க்கவும்.)

ஆனி மாதத்திலும் பார்க்க ஆடி மாதத்தில் வெப்பமும் காற்றும் கூடுதலாக இருக்கும் எனவே அந்த மாதத்தில் உடலில் வாய்வு, வாதத் தன்மையும் உடல் உஷ்ணமும் கூடுதலாக ஏற்படும். ஆடி முதல் நாள் சைவ சமயத்தவர்கள் அனைவரும் அரிசி மா, பயறு, பனங்கட்டி, தேங்காய் வழுக்கல் சேர்த்து கூழ் போல் காய்ச்சிப் பெற்றோரை நினைத்து அவர்களுக்கும் படைத்து பின் உணவாக அருந்தி வருகின்றார்கள். இவ்வுணவு அடுத்து வரும் நாள்களில் உடலில் இலகு தன்மையை ஏற்படுத்தும்.

அடுத்து ஆடியில் முதல்வரும் அமாவாசைத் தினத்தன்று சைவர்கள் மரணித்த தகப்பனாரை நினைவு கூர்ந்து விரதம் அனுஷ்டித்து சமயக் கிரியைகளை முடிப்பார்கள். மதிய உணவில் காற்றோட்டி காய் பொறியல் செய்து பெற்றோருக்குப் படையல் வைத்த பின் உண்பார்கள். உறவினர், நண்பர்களுக்கும் காற்றோட்டி காய்ப் பொரியலும் சேர்த்த உணவு பரிமாறுவார்கள். சமயக் கிரிகைகளுடன் உடல் ரீதியான சுக பலனையும் பெற இது உதவுகின்றது.

காற்று+ஓட்டி+காய் = காற்றோட்டிக்காய் எனக் காரணப் பெயரிலேயே அதன் அர்த்தம் பொதிந்துள்ளது. அடுத்து வரும் காலங்களில் உடம்பில் ஏற்படும் வாய்வு, வாதம் சம்பந்தமான நோய்களில் இருந்து உடலைப் பாதுகாத்து ஆரோக்கியமாக வாழ இது உதவுகின்றது என நம்பலாம்.

**சித்த வைத்தியர்**
**செ.பரமசிவம்பிள்ளை**

சைவ சமயம் - விரதங்கள் - உணவுகள் இவற்றின் இடையே ஆழமான மருத்துவ ரீதியான தொடர்புகள் இருப்பதை நாம் உணர முடியும். இதனை எமது முன்னோர்கள் வாழ்க்கை முறையாகக் கொண்டிருந்தனர்.

காற்றோட்டிக்காயின் சமய சம்பந்தமான மற்றும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலமும் மேலும் பல தகவல்கள் வெளிப்படுத்த வேண்டும். சைவ சமயத்தவர்களைவிட ஏனைய பலரும் அதே தினத்தில் காற்றோட்டிக்காயை உண்பதன் மூலம் தங்கள் உடல் நலத்தைப் பேணுவதற்கு முன் வருவார்கள். ஒரு கால கட்டத்தில் இதனை அனைவரும் பாவிக்கும் நிலை நிச்சயம் ஏற்படும் என்பது திண்ணம்.

காற்றோட்டிக்காய்:- முள்ளு உள்ள படரும் கொடி இனத்தைச் சேர்ந்தது. யாழ்.மாவட்டத்தில் வரட்சியுள்ள இடங் களில் அதிகம் காணப்படும். மரங்களில் படர்ந்தும் வளரும் தன்மை உடையது. ஆடி மாதத்தில் மட்டும் காய் காய்த்திருக்கும். வேறு மருந்துத் தேவைகளுக்குப் பாவிப்பது குறைவு. குழும்பழம போல் உருவமுடைய சற்று பருமனான காயாகும். மிகுந்த கயர்ப்புச் சுவையுடையது. தேடுவாறற்றுக் கிடக்கும் இக்காய் ஆடி அமாவாசைத் தினத்தில் மட்டும் சந்தைக்கு விற்பனைக்கு வரும். மறுதினமே அது தேடுவாரற்ற பொருளாக வீசப்பட்டு விடுகின்றது.

★

# முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் குண்டு வைத்துத் தகர்ப்பு

## கல்முனையில் சம்பவம்

கல்முனைப் பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் அலுவலகம் நேற்று முன்தினம் அதிகாலை 4.45 மணியளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் அந்த அலுவலகம் முற்றாகச் சேதமடைந்ததுடன் அதன் அருகில் அமைந்திருந்த 5 வீடுகளும் சேதங்களுக்குள்ளாகின.

குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அங்கு இடத்திற்கு விரைந்த பொலீஸார் அங்கிருந்து வெடிக்காத நிலையில் காணப்பட்ட குண்டு ஒன்றை மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அலுவலகத்தை முஸ்லீம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் அணியினர் பயன்படுத்தி வந்தனர் என்றும்-

அண்மைக் காலமாக கல்முனையில் முஸ்லீம் காங்கிரஸின் ஆதரவாளர்களுக்கும், பொலீஸாருக்கும் இடையில் நிலவிவந்த முறுகல் நிலையைப் பயன்படுத்தி பொலீஸாரே இந்த தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும் என்றும் -

முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர் என செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது. (ம-7)

# வீடமைப்புக்கு காணிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜுலை20

இடம்பெயர்ந்தவர்களுக்கான ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்துக்கான காணிகள் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சங்கானை கிழக்கு, சங்கானை தெற்கு, சங்கானை மத்தி, கந்தரோடை, பெரியவிளான், மானிப்பாய் கிராமங்களில் தலா ஒவ்வொரு காணியும் பெரியபுலம் மற்றும் பன்னாலைக் கிராமங்களில் தலா இரு காணிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

(ம)

# இந்திய மீனவர் மீரிகமவுக்கு மாற்றம்

மன்னார்,ஜுலை20

மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடந்த மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 இந்திய மீனவர்களையும் மீரிகம தடுப்பு முகாமுக்கு அனுப்பும்படி மன்னார் நீதிவான் எம்.எஸ்.எம்.அக்மீர் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

(ம-3)

# இன்று ஆடி அமாவாசை

இன்று ஆடி அமாவாசை விரத நாள். மாதங்களில் சிறந்த ஆடி மாதத்தில் ஆடிப்பூரம், ஆடிக்கார்த்திகை, ஆடி அமாவாசை முதலியன புனிதம் மிக்கவையாகும்.

இவ்வுலக வாழ்வை எமக்களித்த அன்னையும் பிதாவும் எமது தெய்வங்களே. அவர்கள் அப் பூவுலக வாழ்வை விடுத்து தேகவியோகம் அடைந்துவிட்டால் அவர்களது பிதிர்களுக்கு பிரீதி செய்ய வேண்டியது மக்களாகிய எமது தலையாய கடனாகும். இந்த ஆடி அமாவாசைத் தினத்தில் எள்ளுத் தண்ணீரும் இறைத்து பிதிர்க்கடனை நிறைவேற்றலாம்.

'அமா' என்பது ஓரிடத்திற் பொருந்தியது; குவிந்தது; அடுத்தது எனப் பொருள்படும். சூரியன், சந்திரன் இருவரும் ஓர் இராசியிற் சஞ்சரித்து உறவாடும் நாளே அமாவாசை. இந்த உலக இயக்கத்துக்கு சூரியனே மூல காரணர். சந்திரன் மகிழ்ச்சிக்கும் இன்பத்துக்கும் தெளிந்த அறிவுக்கும் தலைவர். ஆகவே இவற்றை அடைவதற்கு அமாவாசை விரதம் நோற்பதே நல்லது.

நமது தந்தையின் பிதிர்க்கடன் செலுத்தும் நாளாக இந்த ஆடி அமாவாசையே நம்முன்னோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இறந்த ஆன்மாவுக்கு திருப்தியளிப்பதற்கே இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது. அபுத்தி பூர்வமாச் செய்த வினைகள் அந்தியேஷ்டி; தகனக்கிரியைகளால் மாறும்; புத்தி பூர்வமாகச் செய்த வினைகள் அனுபவித்தேயாக வேண்டும். எனவே, பிதிர்க்கடன் செய்யாது விடுதல் பாவமாகும்.

இன்று ஆடி அமாவாசை நாளில் நாம் வில்லூன்றி, கீரிமலை போன்ற புனித தீர்த்தங்களில் நீராடி எமது தந்தையின் ஆவியை எண்ணி அந்த ஆத்மா சாந்தி அடைய, திருப்தி அடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து தர்ப்பணஞ் செய்தல் புண்ணியமாகும்.

மனித வாழ்வின் மகோன்னதம் கல்வியின் அடிப்படையில் தான் தங்கியிருக்கிறது. அந்த அரிய, பெரிய கல்வியை பெரிய தனமாக எமக்கு அளிப்பவர் தந்தையே. அவர் இல்லாவிட்டால் நாம் கல்வியில் முன்னேற முடியாது. 'தந்தையோடு கல்வி போம்' என்பார்கள்.

ஆகவே, தந்தைக்குச் செய்ய வேண்டிய பிதிர்க்கடன் நிச்சயம் செய்தல் வேண்டும். அதிலிருந்து இம்மியளவும் தவறுதல் பாவமாகும்.

*-ஸ்ரீதரன்.*


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 02 - 02 - 1951

மறைவு 20 - 06 - 2001

**அமரர் மா.சின்னராசா (சாமி)**

எம் அன்புக்குரியவனே!
ஆருயிர் நண்பா!
உனது நிழல் என்றும்
எம்மோடுதான் உலாவுகின்றது!
நீ மரணிப்பாய் என்று
நாங்கள் கனவில் கூட நினைக்கவில்லை!
ஆண்டவன் உங்களை அரைவயதில்
பறித்து விட்டான்!
உமது அன்பு மொழிகளை என்றும்
மறக்கமாட்டோம்!

*சரஸ்வதி ஸ்ரோர்ஸ்,*
*கைதடி மேற்கு.*

(90182)

உமது பிரிவால் துயருறும
வா.மார்க்கண்டு குடும்பம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1941 - 02 - 19

உதிர்வு 2000 - 07 - 30

**அமரர் பொன்னையா இராசகோபால்**

(ஸ்ரீதேவி ரான்ஸ்போட் உரிமையாளர்,
மண்ணெண்ணெய் விற்பனை நிலையம், ஆவரங்கால்)

***திதி: ஆடி அமாவாசை - 2001-07-20***

*கலங்கரை விளக்கமே!*

ஏழேழு ஜென்மங்கள்
அடுத்தடுத்து எடுத்தாலும்
உங்களிடம் பட்டகடன்
ஒரு போதும் தீராது!
காலம் முழுமைக்கும்
கண்ணீரின் திவலைகளால்
காணிக்கை செய்வது தான்
கால மகள் கட்டளையோ?
மண்ணில் நாம் உள்ளவரை
மணம் பரப்பும் மலராக
எம்மில் நிலைத்திருக்கும்
உங்கள் உருவம் உடனிருக்கும்!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*ஸ்ரீதேவி,*
*ஆவரங்கால்,*
*புத்தூர்.*

(90148)

உம் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

# இதய தெய்வத்திற்கு எங்கள் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணக வாழ்வில் 20 - 05 - 1938

விண்ணக வாழ்வில் 20 - 07 - 1991

அமரர்
**பெனடிக்ற் டனிசியஸ்**
(சின்னத்தம்பி - கட்டட ஒப்பந்தகாரர்)

ஆண்டுகள் பத்து அகன்றாலும் உங்கள்
அன்பு எம்மை விட்டகலாது!
உங்கள் ஆசியும் அறிவுரைகளும்
இன்னும் எம்மை வழிநடத்துகின்றன.
எங்களை நல்லவராக்கியவர் நீங்கள்!
அப்பா! எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றதென்ன?

*இல.21, நக்கா றோட்,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(90159)

*உங்கள் பிரிவால் துயருறும்*
குடும்பத்தினர்.

# நெஞ்சம்விட்டகலா 31ஆம் நாள்

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

20-07-2001



தோற்றம்
02 - 02 - 1951

மறைவு
20 - 06 - 2001

## அமரர் மாதன் சின்னராசா (சாமி)

(உரிமையாளர்: லக்சுமி ஸ்ரோர்ஸ், கைதடி மேற்கு)

### *எங்கு சென்றனையோ...?*

மாதன் சின்னராசா - நீ
மாயமாய்ப் போன தெங்கே?
சாமியே எம்மை விட்டு - நீ
சடுதியாய்ச் சாய்ந்ததேனோ?

கண்ணிலே நின் முகம்
கணம் தானும் மறையுதில்லை!
நெஞ்சிலே நினைவுகள்
கிஞ்சித்தும் ஓயுதில்லை!
"லக்சுமி ஸ்ரோர்ஸ்" உந்தன்
வரவுக்காய் ஏங்குதிங்கே?
லட்சமாய்த் தந்தாலும்
உன்முகம் காண்பதெங்கே?
நெற்றியில் திருநீறு
பட்டையாயொலித்திடும்
நெஞ்சிலே வஞ்சமில்லா
செய்கைகள் வெளிப்படும்!

சுற்றியே சமூகத்தில்
முன்னின்று உழைத்திடும்
கந்தனின் பக்தனே
இனிங்கித் தோட்டத்தானும்
தேடுவான் உன்னையல்லோ?
கைதடி மேற்கில் - உந்தன்
கதையின்னும் ஓயவில்லை
கட்டிய மனைவியின்
கண்களின்னும் காயவில்லை
விட்ட உன் விழுதவனின்
விம்மல்கள் தணியவில்லை
விதிவிட்ட வழி என்று
எமை விட்டு எங்கு சென்றனையோ?

இன்று (20-07-2001) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் அவரது நினைவாக நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

'லக்சுமி வாசா'
கைதடி மேற்கு,
கைதடி.

- குடும்பத்தினர்.

(C/17470)

# மக்கள் பாவிக்க முடியாத நிலையில் சங்கானைப் பகுதி வீதிகள்!

## மழைகாலத்துக்கு முன் திருத்தக் கோரிக்கை

சங்கானை,ஜூலை20

சங்கானை முருகமூர்த்தி வீதி, தேவாலய வீதிகள் இரண்டும் எத்தனையோ வருடங்களாகத் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாய் பாவனைக்கு உதவாத நிலையில் இருக்கின்றன.

சங்கானை பிரதான வீதியில் ஆரம்பித்து கரச்சி மயானம் வரை செல்லும் இவ்விரு வீதிகளும் பொது மக்களின் பாவனை கூடிய வீதிகளாகும்

குறிப்பாக விவசாயிகள் மற்றும் இறுதிக்கிரியைகளுக்காக மயானத்திற்கு செல்வோர், போக்குவரத்திற்குப் பாவனை செய்துவரும் இவ்விரு வீதிகளும் பாதசாரிகள் நடந்து போவதற்குக்கூட முடியாத நிலையில் உள்ளன.

மழைகாலம் நெருங்குவதோடு, விவசாயிகள் தமது வயல்களைச் செப்பனிட்டு அடுத்த போகச் செய்கையையும் தொடங்குகின்ற காலமாகும். அதற்கு முன் இதனைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-29)

## நல்லூர்ப் பிரதேச சனசமூக நிலைய மூலதன நன்கொடை

யாழ்ப்பாணம்,ஜூலை20

இவ்வருடத்திற்கான சனசமூக நிலைய மூலதன நன்கொடை கிடைக்கப்பெற்றுள்ளதால், நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நன்கொடை பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் அனைத்தும் தமது விண்ணப்பத்தை உடன் நல்லூர் பிரதேச சபைத் தலைமை செயலகத்தில் சமர்ப்பித்து உரிய நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (க)

## களப்பலி

வவுனியா,ஜூலை20

மன்னார் - கட்டுக்கரைக்குளம் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற விபத்து ஒன்றில் எல்லைப் படையைச் சேர்ந்த திருஞானச்செல்வம் ஐங்கரன் (யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ம-7-164)

## நெல்லியடி சந்தை கட்டட வேலைகள் பூர்த்தியாகும் நிலையில்!

வடமராட்சி,ஜூலை20

நெல்லியடியில் தற்காலிகமாக ஆரம்பிக்கப்படவுள்ள சந்தைக்கான கட்டடங்கள் 10லட்சம் ரூபா செலவில பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபையால் ஏற்படுத்தப்படும் இச்சந்தைக்கான கொட்டகைகள் 5லட்சம் ரூபா செலவிலும், இறைச்சிக்கடைகளுக்கான கட்டடம் 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், சந்தைக்கான சீமெந்து நிலம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. (க-173)

# நாட்டில் 156 பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் மட்டுமே பணி!


கொழும்பு,ஜூலை20

நாட்டில் பல தரங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 83 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் ஓர் ஆசிரியர் மாத்திரம் பணியாற்றும் 156 பாடசாலைகளும் இரு ஆசிரியர்கள் மாத்திரம் பணியாற்றும் 420 பாடசாலைகளும் மூன்று ஆசிரியர்கள் மாத்திரம் பணியாற்றும் 580 பாடசாலைகளும் நான்கு ஆசிரியர்கள் மாத்திரம் பணியாற்றும் 1134 பாடசாலைகளும் ஆறில் இருந்து 10 வரையான ஆசிரியர்கள் பணியாற்றும் 1783 பாடசாலைகளும் அடங்குகின்றன என்று கல்வி அமைச்சின் கீழ் இயங்கிவரும் பாடசாலைகள் தொடர்பான கணக்காளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

1994 - 1998 வரையான ஐந்து ஆண்டுகள் தொடர்பான அறிக்கையில் 1994இல் ஓர் ஆசிரியர் மாத்திரம் பணியாற்றிய பாடசாலைகள் 210 இருந்தன எனவும், அந்த எண்ணிக்கை 1996இல் 228 ஆகவும், 1997 இல் 222 ஆகவும் 1998 இல் 156 ஆகவும் குறைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, 1998 பெப்ரவரி 8ஆம் திகதி கல்வி உயர் கல்வி அமைச்சு மேற்கொண்ட கணனி மதிப்பீட்டில் நாட்டில் 50 மாணவர்களுக்குக் குறைவாகக் கல்வி பயிலும் பாடசாலைகள் 1213 இருந்தன எனவும் அவற்றுள் 353 பாடசாலைகளில் 25 மாணவர்களுக்கும் குறைவானோரே கல்வி கற்று வந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 50 மாணவர்களுககும் குறைவாக கல்வி பயிலும் இந்த 1213 பாடசாலைகளில் 4495 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

1998 இல் நாடெங்கும் உள்ள பாடசாலைகளில் 1லட்சத்து 88 ஆயிரத்து 200 ஆசிரியர்கள் பணியாற்றினர். இவர்களில் 49 ஆயிரத்து 657 பேர் பட்டதாரி ஆசிரியர்கள் எனவும் 1 லட்சத்து 6 ஆயிரத்து 38 பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் எனவும் ஆசிரியர் சான்றிதழ் பெற்ற 3 ஆயிரத்து 772 பேரும் ஆசிரியர் சான்றிதழ் பெறாத 24ஆயிரத்து 468 பேரும ஏனைய ஆசிரியர்கள் 4 ஆயிரத்து 265 பேரும் கடமையாற்றினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட பின்னர் கொலை நடைபெற்ற அவரது வீட்டிற்கு அருகே இருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் சைக்கிளையே மேலே உள்ள படத்தில் காண்கின்றீர்கள்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம திகதிக்கு முன்னர் இந்த சைக்கிளை வைத்திருந்தவர்கள் எவர் பற்றியாவது தகவல் தெரியவந்தால் அது தொடர்பான விவரங்களை 'குற்றப் புலனாய்வுத் திணைக்களம், த.பெட்டி இலக்கம் 534, 4ஆம் மாடி கொழும்பு-1' என்னும் முகவரிக்கு அறியத்தருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் டி சில்வா பொது மக்களிடம் கேட்டிருக்கிறார்.

தகவல் தருவோரின் பெயர், விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சைக்கிளைப் பொதுமக்கள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது. (ஐ-10)

## குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனைஓலை பூங்கன்றுச் சாடிகள் நெதர்லாந்துக்கு அனுப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை20

குடாநாட்டுக் கைப்பணி நிலையத்தினால் பனை ஓலை மூலம் உற்பத்தி செய்யப்படும் பூக்கன்றுச் சாடிகள் நெதர்லாந்துக்கு அனுப்பப்படவிருப்பதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக ஏற்றுமதி திணைக்களப் பணிப்பாளருடன் தொடர்புகொண்ட நெதர்லாந்து அதிகாரிகள் மாதாந்தம் 9ஆயிரம் பனை ஓலைச் சாடிகளை நெதர்லாந்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டிருப்பதாக பனை அபிவிருத்திச் சபை அதிகாரி வி.இரகுநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள இவர் இது குறித்து மேலும் கூறியதாவது:-

நான் கொழும்புக்குத் திரும்பும் போது பல்வேறு அளவுகளில் வடிவமைக்கப்பட்ட ஓலைச்சாடிகளின் மாதிரிகளை எடுத்துச் செல்லவுள்ளேன். அதன் பின்னர் கப்பல் மூலம் பெருமளவு ஓலைச் சாடிகளை கொழும்புக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளவுள்ளேன் - என்றார்.(க-4)

# தற்புகழ்ச்சியையும் சுயவிளம்பரத்தையும் ஏற்காத பண்பாளன் கே.ஸி.தங்கராஜா

**குடாநாட்டின் தமிழ்ப் பத்திரிகைத் துறை முன்னோடிகளில் ஒருவரான அமரர் கே.ஸி.தங்கராஜாவின் நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த நினைவுக் குறிப்பு பிரசுரமாகிறது.**

## பத்திரிகைத்துறையின் முன்னோடி கே.ஸி.ரியின் நினைவுதினம் இன்று

அமரர் கே.ஸி.தங்கராஜா அவர்கள் மறைந்து பதினான்கு வருடங்கள் சென்றுவிட்டன. 1959ஆம் ஆண்டு தமிழர் பிரதேசத்தில் முதலாவது தமிழ்த் தினசரியை ஆரம்பித்து, தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர் அவர். 'ஈழநாடு' பத்திரிகை முதலில் வாரஏடாகவும், பின்னர் தினசரியாகவும் பிரசுரிக்கப்பட்டது. அமரர் அவர்களின் நினைவில் என்றும் நீங்காத இடம்பெற்றிருந்தவர் கொழும்புத்துறைச் சுவாமி என்னும் சிவயோகசுவாமிகள் ஆவார். அமரர் தங்கராஜா அவர்களின் தாய் வழி மாமனார் சிதம்பரத்தில் இருந்து தமிழ்ப் பணியாற்றிய இலக்கண சுவாமிகள் எனும் முத்துக்குமாரத் தம்பிரான் ஆவார்.

சிவயோக சுவாமிகளின் நல்லாசிகளுடன் ஈழநாடு ஆரம்பிக்கப்பட்ட பொழுது சுவாமிகள் கூறிய வார்த்தைகள் 'ஏசுவார்கள்... எரிப்பார்கள், உண்மையை.... உண்மையாக எழுதுங்கள்" என்பதாகும். இத்தெய்வீக தீர்க்க தரிசனம் இன்றும் உண்மையாக உள்ளது.

சிறுவயது முதல் பொறுப்புணர்ச்சியும் செயற்திறனும் கொண்டு விளங்கியவர் அமரர் தங்கராஜா என்றால் மிகையில்லை. கொழும்பில் வசித்த காலம் முதல் தன்னலம் கருதாது பொதுப்பணிகளுக்குத் தன்னை அர்ப்பணித்தார். அவர் வகித்த உயர் பதவிகள் அவரை மாசுபடுத்தவில்லை. எல்லோரையும் அன்பாக உபசரித்து அளவளாவும் பண்பு அன்னாரின் உள்நோக்கையும் தளராத வலுவையும் வெளிப்படுத்தியதொன்றாகும். எளிமையான முறையில் தனது பதவியை ஏற்றுக் கொண்ட அமரர் அவர்களை நாளடைவில் பல உயர்பதவிகள் தேடிச் சென்றன.

'ரைம் ஒவ் சிலோன்', தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம், 'சி.எப்.ரி.', இந்து பரிபாலன சபை போன்ற நிறுவனங்களில் அவர் ஆற்றிய சேவைகள் இன, மத பேதமற்ற பயன்கருதாப் பணிகளாகும். 'ரைம்ஸ் ஒவ் சிலோன்' நிறுவனத்தில் அமரர் பதவி வகித்த காலத்தில்தான் 'லங்காதீப' என்ற சிங்களப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அதேபோன்று அங்கு தமிழ் பத்திரிகை ஒன்றை வெளியிட எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. ஆனால் அவரின் காலத்தில் வெளிவந்த 'லங்கா தீப' என்ற பத்திரிகை தென்னிலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் மிகப் பிரபல்யம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்டது.

அதன் பின்னர் அமரர் அவர்கள் 'ஈழநாடு' என்ற வாரப் பத்திரிகையை 11.02.59 இல் தொடங்கி சில காலத்தின் பின் 11.02.61 இல் அது தினசரியானது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த, ஒரேயொரு வாரப் பத்திரிகையான 'ஈழகேசரி' நின்று போனமை அன்னாருக்குப் பெருந் துன்பத்தைக் கொடுத்தது. இதனால் மனம் சோர்ந்த நிலையில் இருந்த அமரர் தான் ஒரு பத்திரிகையைத் தொடங்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டு அவருடைய நண்பர்களாகிய கலைப்புலவர் க.நவரத்தினபதி, திருவாளர்கள் ஏ.ஈ.தம்பர், ச.அம்பிகைபாகன், கா.வைரமுத்து, 'ஈழகேசரி' பொன்னையா, ஹண்டி பேரின்பநாயகம், ஒரேற்றர் சி.சுப்பிரமணியம், அன்னாரது தம்பியாராகிய கே.சி.சண்முகரத்தினம் மற்றும் கொழும்பு நண்பர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து ஈழநாட்டைத் தொடக்கினார். இப்பத்திரிகையை இயக்குவதற்கு பிரதம ஆசிரியர் ஒருவரைத் தேடி ஈற்றில் வீரகேசரியில் கடமையாற்றிய கே.பி.ஹரன் ஐயா அவர்களை பத்திரிகை நிர்வாக ஆசிரியராக நியமித்தார். இதனைத் தொடர்ந்து பலர் இப்பொறுப்பை நிர்வகித்தனர்.

திரு.எஸ்.எம்.கோபாலரத்தினம், அமரர் என். சபாரத்தினம், எஸ். பெருமாள் ஆகியோர் அப்பணியைத் தொடர்ந்து மேற்கொண்டனர்.

ஈழநாடு ஸ்தாபனத்தின் பல்வேறு காலகட்டங்களில் பல இடர்களை அது அனுபவித்திருக்கிறது. இடர்களுக்கு மத்தியில் அமரர் அசையாது தன் அலுவல்களைச் செய்து வருவார். வந்த இடர்கள் வந்தவாறே போய்விடும். ஈழநாட்டுக்கு நிழல் கொடுக்கும் ஒரு விருட்சம் போல விளங்கினார். பலரும் பல குறைபாடுகளைத் தெரிவித்து மன அமைதி பெற்றனர். அமரர் அவர்கள் கொழும்பில் இருந்து வருகிறார் என்றதும் ஒரு கூட்டம் அவரைச் சந்திக்கக் காத்திருக்கும். ஒருமுறை அமரரும் வேறு ஒரு நண்பரும் யோகர் சுவாமிகளின் ஆச்சிரமப் படலையைத் திறந்து உள்ளே சென்ற பொழுது' சுவாமி அவர்கள் உரத்த சத்தத்தில் 'யாரடா? அது' என்று கேட்டார். அதற்கு 'நான் தங்கராஜா' என்று பதிலளித்தார் அமரர். அவர் 'தங்கராஜா அல்லடா! தியாகராஜா' என அறிவித்தார் சுவாமிகள். இதன் பின்னர் அமரரை எப்பொழுது கண்டாலும் தியாகராஜா என அழைப்பார் அவர்.

ஈழநாடு தாபனத்தை தொடங்கிய பொழுது - அமரர் அவர்கள் தமிழரின் சொந்தப் பண்பாட்டினையும் உரிமைகளையும் எடுத்துரைக்கும் பொழுது - பிற சமூகத்தினரும் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை உணர்ந்து வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டும், சமரச உணர்வை விருத்தி செய்ய ஈழநாடு ஒரு கருத்தரங்காக விளங்கும் என்று தெரிவித்திருந்தார்.

1968ஆம் ஆண்டு யாழ்.இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய பொழுது அமரர் தங்கராஜா, புதிய கைத்தொழில்களை அதிக லாபம் பெற வேண்டுமென்ற சுயநல நோக்கத்துடனன்றி சமூக நன்மைக்காக ஆரம்பித்து செயற்படவேண்டும் - என்றார். மேலும் அமரர் அவர்கள் தீர்க்க தரிசனமான வேறு ஒரு சிந்தனையையும் தெரிவித்திருந்தார். அதாவது யாழ்ப்பாணத்தில் விளையும் ருசியான [illegible]களையும், வாழைப் பழம், காய்கறி வகைகளை பண லாபத்திற்காக வெளியே அனுப்பி விடுகிறோம். இதனால் நம் மக்களுக்கு அவை சுலபமாகக் கிடைப்பதில்லை. இதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சிகரெட்டுகள் வாங்கிப் புகைத்துத் தள்ளுவதைச் சுட்டிக்காட்டி புகைக்கத்தான் வேண்டுமாயின் யாழ்ப்பாணப் புகையிலையையே புகைக்குமாறும் இங்கு விளையும் கனிகளும் காய்கறிகளும் இங்குள்ள மக்களுக்குத் தாராளமாகக் கிடைத்து அவர்கள் நல்ல தேக திடத்துடன் வாழ வகைசெய்ய வேண்டும் என்றார். அமரரின் நாட்டுப் பற்று இதில் புலனாகிறது.

ஈழநாடு குறிப்பிடத்தக்க அளவுக்கு வருமானத்தை ஈட்டாவிட்டாலும் தொடர்ச்சியாக இயங்கக் கூடிய நிலையிலிருந்து வந்தது. ஒரு கட்டத்தில் நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பு முன்னர் அரச சேவையில் நிரந்தரக் காரியதரிசியாக இருந்த எம்.வைரமுத்து அவர்களிடம் கொடுக்கப்பட்ட பொழுது அவரின் நிர்வாகத் திறமையையும் முகாமைத்துவ ஆளுமையையும் பலரும் பாராட்டினார்கள். இக்காலத்தில் வைரமுத்து ஐயாவின் வழி காட்டலின் கீழ் நான் கடமையாற்றும் பேறு கிடைக்கப் பெற்றேன். அவரது நிர்வாக நுட்பங்களைப் பெற்றுக்கொண்டதன் பயனாக யாழ்ப்பாணத்தில் வேறு ஒரு தினசரியை ஆரம்பிக்க முடியும் என்ற துணிவையும், நம்பிக்கையையும் எனக்குக் கொடுத்தது. இந்த அடிப்படையில்தான் இன்று பிரபலயமாக இருக்கும் ஒரு பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு முடிந்தது. யாழ்ப்பாணத்தில் வெளிவந்த இன்னாள், முன்னாள் பத்திரிகைகள் யாவும் அமரர் தங்கராஜா அவர்களினால் ஆரம்பிக்கப் பெற்ற ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றிய சிலராலேயே முன்னெடுத்துச் செல்லப்பட்டன. மாவட்ட ரீதியில் ஒரு பத்திரிகையைத் தாபித்து நடத்த முடியும் என்ற அமரரின் தீர்க்க தரிசனம் இன்று பல பத்திரிகைகளை உருவாக்க உந்துசக்தியாக விளங்கியது.

**எஸ்.கே.ரி.**

இறுதியாக, அமரர் அவர்கள் எந்த விடயத்தையும் அமைதியாகவும், தர்மசிந்தனையுடனும் சிந்தித்துச் செயலாற்றுபவர். அத்துடன் எப்பொழுதும் நண்பர்களுடன் நல்லதையே சிந்தித்து, நன்றாக நல்லதைப் பேசி, செய்து நாடறியப் புகழுடன் வாழ்ந்தவர். புகழையும், சுயவிளம்பரங்களையும், பாராட்டுக்களையும் அறவே விரும்பாதவர். தன்னைப் பற்றிய செய்திகளையோ, அல்லது தான் பங்குபற்றும் நிகழ்ச்சிகளையோ விளம்பரப்படுத்த இசையாதவர்.

பத்திரிகை ஸ்தாபகர் ஒருவர் மனித பலவீனங்களுக்கு அப்பால் செயற்பட்டது அமரர் தங்கராஜாவின் அதியுயர்ந்த பண்பாகும். இப் பண்பாட்டினை, பேணுவது பொதுச் சேவையில் ஈடுபடுபவர்களின் தலையாய கடமையாகும்.

எண்பது ஆண்டுகள் நம்முடன் வாழ்ந்த அமரர் தங்கராஜா விரும்பியவாறு ஈழநாடு எங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை மேலோங்கி நிற்கிறது.

★

உ

## சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயம்

### அலங்கார உற்சவம்

நிகழும் விஷு வருடம் ஆடிமாதம் 4ஆம் நாள் இன்று (20-07-2001) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஆடி 18ஆம் நாள் (03.08.2001) வெள்ளிக்கிழமை "ஸ்ரீ பழநிவேல் பவனி" ஆடி வேல் விழாவுடனும், ஆடி 19ஆம் நாள் (04.08.2001) சனிக்கிழமை தீர்த்தோற்சவத்துடனும் நிறைவெய்த வேண்டிய முருகப்பெருமானின் அலங்கார உற்சவம், தற்போதைய சூழ் நிலையால் நடைபெறமுடியாமலிருப்பது யாவரும் அறிந்ததே! எனவே இக்காலப்பகுதியில் பழநியாண்டவர் அடியார்கள் சென்ற வருடம்போல் இம்முறையும் விரதமனுட்டித்தும் வேல வனை நெஞ்சார நினைந்து வழிபட்டும் அருள் பெறுவோமாக.

- ஆலய பரிபாலனசபை.

அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயம்,
சாவகச்சேரி.

(C/17484)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## அமரர் பெ.அமிர்தநாதர்

(சில்லாலை)

மலர்வு 24.01.1928 — உதிர்வு 20.07.2000

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்,
பாசமிகு கணவனாய், தந்தையாய்,
மாமனாய், பேரனாய் எம்மையெல்லாம்
அன்போடு அரவணைத்தீரே!
ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் ஆதரவு இல்லாமல்
நாம் கண்ணீர் வடிக்கின்றோம்.

*ஆண்டுகள் பல சென்றாலும்*
*உங்கள் நினைவலைகள் – எம் நெஞ்சை விட்டு அகலாது.*

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,உற்றார்,
உறவினர்.

*சில்லாலை மேற்கு,*
*பண்டத்தரிப்பு.*
அ.மேரி ஜோசெப்பின்
*கோவில் குளம், வவுனியா.*

(C-17489)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### உயர்பட்டப் படிப்புகள் பீடம்.

1. ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி - 2001/2003

மேற்படி கற்கைநெறிக்கான எழுத்துத் தேர்வில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு 2001.07.23 (திங்கட்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு உயர்பட்டப் படிப்புகள் பீடச் சபையறையில் நடைபெறும்.

நேர்முகத் தேர்விற்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

எழுத்துத் தேர்வில் தகைமை பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலை உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் பார்வையிடலாம்.

2. கல்வி முதுமாணிக் கற்கை நெறி - 2001/2002

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கான எழுத்துத் தேர்வு 2001.07.30 (திங்கட்கிழமை) முற்பகல் 10.00 மணிக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகளுக்கு
அனுமதி அட்டைகள்
அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/17490)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

அளவெட்டி மேற்கு கலைமகள் சனசமூக கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி.

இடம்:- கந்தரோடை சவாரித்திடல்.
காலம்:- 22-07-2001
நேரம்:- மாலை - 2.00 மணி.

(90245) - நிர்வாகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1916 - 08 - 16

மறைவு 2001 - 06 - 20

### அமரர்

## தாமோதரம்பிள்ளை செகராஜசிங்கம்

(மதிபாலசிங்கம்)

*( ஓய்வுபெற்ற மாநகரசபைக் கணக்காளர்)*

எங்கள் குடும்பத் தலைவர் தா.செகராஜசிங்கம் அவர்களினது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகலவழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோருக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் வைத்திய உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (2001-07-20) வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் (2001-07-22) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'வல்லியானந்தம்',
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*

(90240) - குடும்பத்தினர்.


## பிரமாண்டமான மின் ஒளியில்

## மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

(பூங்கன்றுகளும் கனிமரங்களும்)

## பூங்கனிச் சோலைக்குள் ஒரு பூங்கனிப் பூங்கா

எதிர்வரும் 21ஆம், 22ஆம், 23ஆம் (சனி, ஞாயிறு, திங்கள்) திகதிகளில் காலை 8 மணிமுதல் இரவு 9.30 மணிவரை வடபகுதியிலே எங்குமே பார்த்திராத புதிய மெருகுடன் வடிவமைக்கப்பட்ட பசுமையான இயற்கை எழில் நிறைந்த கண்ணைக் கவரும் காட்சிகளுடன் பூங்கனிச் சோலைக்குள் ஒரு பூங்கனிப் பூங்கா அமைந்துள்ளது.

- தண்ணீர் சிந்தும் பொம்மை
- அலங்கார வளைவுகள்
- சிறுவர்களுக்கான சுழல் கதிரைகள்
- சுழல் குடை
- பலவர்ண மீன்கள்
- பல்லினப் பறவைகள்
- இராட்டினங்கள்
- பொறிமுறை உயர்த்தி
- இரண்டு தட்டு சுழல் இராட்டினம்
- பளிங்கிலான நட்சத்திரத் தொட்டிக்குள் நீரில் சுழலும் பந்து
- பலவர்ண மின்குமிழ் பூம்பந்தல்
- மலையருவி
- பசும்புற்றரைகள்
- புல்மேடைகள்
- சொகுசு ஊஞ்சல்
- தண்ணீர்த் தொட்டிகள்
- தாமரைத் தடாகத்தினுள் தண்ணீர் சிந்தி

**எம்மிடம் விற்பனைக்குள்ள பூங்கன்றுகள்:**

பலவர்ண றோஜாச் செடிகள், பலஇன செவ்வரத்தை, பல இனக் குறோட்டன், சைபிறஸ், அரக்கேரியா, மொசந்தாஸ், அந்தூரியம், அம்பரல், ஜெசினாஸ், எவக்றீன் மற்றும் பல.

**விற்பனைக்குள்ள கனி மரங்கள்:**

நல்லின எலுமிச்சை, தோடை, மினி எலுமிச்சை, பலாக்கன்று, ஜம்புநாவல், 1K தேசி மற்றும் பல பயன்தரு கனிமரங்கள்.

எமது மண்ணில் உள்ள உள்ஊர் வளங்களைக்கொண்டு மேலைத்தேய காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள பூங்கனிச் சோலையின் எழிலை நேரில் பார்த்து மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: வெள்ளைப் பிள்ளையார் ஆலயத் திருப்பணி நிதிக்காக, ஆலய பரிபாலன சபையினரால் பிரவேசத்திற்கான அன்பளிப்பாகப் 10/- பெறப்படும். 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இலவசம்.

குறிப்பு: எமது புகைப்படப்பிடிப்பாளரால் புகைப்படம் எடுத்துக்கொள்ளக் கண்காட்சி நாள்களில் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (3 நாள்களில் படம் வழங்கப்படும்)

**வீடியோ, புகைப்படப்பிடிப்பாளர் கவனத்துக்கு:** எதிர்வரும் 20ஆம், 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் வீடியோ மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்புக்களைத் தவிர்த்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடமாவடி,
திருநெல்வேலி.

(C/17486)

(நல்லூர் பின் வீதியில் இருந்து வடக்குப் பக்கமாக 1500 யார் தூரம்)

T.P: 2976

# ஐந்து கோபுரங்கள் அலங்கரிக்கும் கண்ணப்பரின் திருக்காளத்தி

தேவாதி தேவர் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இடம் திருக்காளத்தித் திருத்தலம் ஆகும். இந்த சிவத்தலம் ஆந்திரப் பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. ரயில் நிலையம் காளத்தி. காளத்தி ரயில் நிலையத்தில் இறங்கினால் 2 மைல் தூரத்தில் திருக்கோவில் உளது. திருக்காளத்தியை சீகாளத்தி கடவுள் மால் வரை திருமலை தென் கயிலாயம் என்றும் வடமொழியில் காளஸ்தி என்றும் கூறுவர். திருக்காளத்தி என்றவுடன் எமது மனக்கண் முன் தோன்றுவது சிவலிங்கத் திருமேனியும், வலக்கண்ணை இடந்து அப்பிய கண்ணப்பநாயனாரும் ஆவர். கண்ணப்பநாயனாருடைய திருநாடு பொத்தப்பிநாடு. இந்த பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் அவர் அவதரித்த பதி. கண்ணப்ப நாயனாருக்கு பெற்றோர் இட்ட திருநாமம் திண்ணன் ஆகும். கண்ணப்பர் மலைக்கு மேற் புறமாக காளத்தி ஈஸ்வரருடைய மிகப் பெரிய ஆலயம் உண்டு. காளத்தி ஈஸ்வரர் வாயு லிங்க மாகும். இறைவன் திருமுன் உள்ள திருவிளக்கு ஒன்று காற்றால் மோதப் பெற்றாற் போல அசைத்து கொண்டே இருக்கும். திருக்காளத்தியை ஐந்து கோபுரங்கள் அலங்கரிக்கின்றன. குன்றினுக்கு அயலே பாய்வது குளிர்ந்த பொன்முகலி ஆறு மேற்கு நோக்கிய சந்நிதி.

பொத்தப்பி நாட்டில் வேட்டுவ குலத்தவரே பரந்து, மிகுந்து வாழ்பவர்கள். பொத்தப்பி நாட்டில் தும்பை, முல்லை, குறிஞ்சி, வெட்சி, பூத்துக் குலுங்கும் தாமரை மலர்ந்த தடாகங்களைக்காணலாம். சோலைகள் மிகுந்த நாடு பொத்தப்பி. முத்துக்களை கொழித்து வரும் அருவிகள் பாயும் சாரல்களை உடையது உடுப்பூர் என்னும் கிராமம். அரண் போல நீண்ட மலைகள் சூழ்ந்து அழகு தரும் சிற்றூர் உடுப்பூர். மலைகளில் மூங்கில்கள் செழித்து வளரும். தேக்கு, அகில், சந்தன மரங்கள் காடுகளில் ஓங்கி வளரும். விளாம் பழத்தை பிசைந்து தேன் கலந்து உண்பர் உடுப்பூர் மக்கள். மலைத்தேனும் ஊன் கலந்த சோறும் இம்மலை வாழ்வேடுவரின் உணவாகும். அத்தோடு தேனும், செந்தினை மாவும் வேடுவரின் விருப்பமான சிற்றுண்டி. கண்ணப்பநாயனாருடைய திருவூர் மலையும் மலை சார்ந்த இடமாகையால் இது குறிஞ்சி நிலம் எனலாம். ஏறக்குறைய 2000 ஆண்டு பழைமை வாய்ந்த குன்றக் குரவைக் கூத்து, இந்தமலைக் குறவருடையது எனலாம்.

**ஞானக் கதிர்**

திருக்காளத்தியில் எழுந்தருளி இருக்கும் சிவலிங்கத் திருமேனியைக் காளத்தி அப்பர், கணநாதர், குடுமித் தேவர் எனப் பல நாமங்களால் வேடுவப் பெருங்குடி மக்கள் கைகூப்பித் தொழுவர். தேவி பெயர் ஞானப் பூங்கோதை அம்மையார். சீகாளத்தி என்றால் சீ — சிலந்தி, காளம்—பாம்பு, அத்தி—யானை, இவை ஒன்று சேர்ந்து காளத்தி தேவ தேவீசனைப் பூசித்துப் பெரும் பேறு பெற்றன.

நவீன விஞ்ஞான வளர்ச்சி காரணமாக மேற்கத்திய மருத்துவத் துறையில் கண் தானம் செய்பவர்களும், பார்வை இல்லாதவர்கள். பார்வை பெறுவதும் கண்கூடு. கண்ணப்பர் சிவபக்திப் பெருக்காலும், அன்பு மேலீட்டாலும் காளத்தி அப்பரின் கண்ணில் நின்று பெருகிய உதிரத்தைத் தடுத்து நிறுத்த மூலிகைகள், பச்சிலைகள் தேடிப் பிழிந்து விட்டும் பெருகிய உதிரம் நிற்கவில்லை. இறுதியில் 'ஊனுக்கு ஊன்' என்ற அமுத வாக்கு கண்ணப்பரின் நினைவிற்கு வரவே. தனது வலக்கண்ணைக் கூரிய அம்பால் இடந்து இறைவனுக்கு அப்பியதும் பெருகிய குருதி நின்றது.

நின்ற செங் குருதி கண்டார்;
நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார்; கூத்து மாடி
''நன்றுநான் செய்த விந்தமதி''
யென நகையுந் தோன்ற
வொன்றிய களிப்பினாலே
யுன்மத்தர் போல மிக்கார்
—சேக்கிழார் சுவாமிகள்

மேற்கூறிய செய்யுள் பெரிய புராணத்தில் உள்ள கண்ணப்பநாயனார் புராணத்தில் மிக மிக இனிமையானவை.

★ பொருள்:-காளத்தி ஈஸ்வரருடைய திருக்கண்ணின்றும் வழிந்து ஓடிய செந்நிறமான இரத்தம் ஓடாது நிற்கக் கண்டார். இந்த அக மகிழ்வாலே துள்ளிக் குதித்தார் (சிறுவர்கள் போல). திண்ணனார் தமது மலை போன்ற தோள்கள் இரண்டிலும் கையால் தட்டி ஆரவாரம் செய்தார். கூத்தும் ஆடினார். தான் புத்திசாதுரியமாக யோசனை செய்து செய்த, செய்யல் நல்ல பெறுபேறைத் தந்தது என்று புன்சிரிப்புத் தோன்றப் பெருமகிழ்வால் பெருமிதம் உற்றார். ★

**பொ. சிவப்பிரகாசம்**

# காங்கேசன்துறை முகாமில் ஐந்து பேர் தடுத்துவைப்பு

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தற்போது 5 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அங்கு சென்று திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் என். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி கஸ்தூரியார் வீதியில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்ட சுப்பிரமணியம் சிவனேஸ்வரன்(வயது 19—1 ஆம் வட்டாரம் கூனித்தீவு, மூதூர்) என்பவரும் —

கடந்த 16 ஆம் திகதி சுதுமலை அம்மன் கோயிலடியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களான நற்குணம் மனோரஞ்சன் (வயது 20—மானிப்பாய் மேற்கு), மகாதேவன் அஜுஷன் (வயது 16 —கிளுவானை வீதி, கோப்பாய் மத்தி) ஆகியோரும்— மகேந்திரநாதன் சங்கர் (இல. 37/1, குமாரசாமி வீதி, கந்தர்மடம்), செல்லர் சின்னராசா (நாச்சிமார் கோயில் வீதி, மானிப்பாய்) ஆகியோரும் அங்கு தடுத்த வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

# கைத்தொழில் பொருள்களின் கண்காட்சி வவுனியாவில்!

## யாழ், முயற்சியாளரும் பங்குபற்றலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வவுனியாவில் எதிர் வரும் செப்ரம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண மட்ட கைத்தொழில் பொருள் கண்காட்சியில் யாழ். மாவட்ட கைத்தொழில் முயற்சியாளர்களும் பங்கு பற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மாகாண மட்ட கைத்தொழில் பொருள் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் குடாநாட்டுக் கைத்தொழில் முயற்சியாளர்கள் அனைவரும் தமது கைத்தொழில் உற்பத்திப் பொருள்களை அந்தந்தப் பகுதி பிரதேச செயலகங்களுடன் தொடர்புகொண்டு அவர்களுக்கூடாக எதிர் வரும் ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தொழில் துறைத் திணைக்கள பணிப்பாளருக்குக் கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தொழில் துறை திணைக்கள அலுவலக அதிகாரி ஒருவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்—

கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள்களுக்குச் சந்தைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியில் குடாநாட்டில் பன்னவேலை செய்பவர்கள், மட்பாண்ட உற்பத்தியாளர்கள், காகிதப் பொம்மை செய்வோர், தையல் வேலை செய்பவர்கள், பூவேலை மற்றும் இவை போன்ற கைத்தொழில்களில் ஈடுபடுபவர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தவும், விளம்பரம் செய்யவும் முடியும் என்றும்—

எனவே இந்தக் கண்காட்சியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தமது உற்பத்திப் பொருள்களை நேர காலத்துடன் பிரதேச செயலர் பிரிவுகளில் ஒப்படைக்குமாறும்—

தெரிவித்தார். (ஐ-6-4)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தும்பளை இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் கோயில் மகாமண்டலாபிஷேக பூர்த்தியும் மகாசாந்தி அன்னதானப் பெருவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

இதனை ஒட்டி கும்பாபிஷேகமலரும் சைவகுல தீபம் எனும் சஞ்சிகை வெளியீட்டு விழாவும் ஜப்பான் பல்கலைக் கழக வருகை விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறும்.

இம்மலரையும் சஞ்சிகையையும் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியிட்டு, உரை நிகழ்த்துவார். யாழ். புதிய உயர் கல்லூரி அதிபர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் சிறப்புரையாற்றுவார்.

கிரியைகளில் கலந்து கொண்ட குருமார்கள், சிவாச்சாரியார்களுக்குக் கௌரவிப்பு, விசேட விருது வழங்கல், தங்கப்பதக்கம் சூடுதல் ஆகிய நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிபதி சு. பா. சுப்பிரமணியம், இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். (ஐ-173)

★ ★ ★

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் ஆடிப்பூரத் (பூரகர்மா) திருவிழா எதிர் வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும், நவோத்தர சகஸ்ர மகாசங்காபிஷேகமும் இடம் பெறும். (க-173)

# தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டால் எவரும் எம்மை அசைக்க முடியாது!

## வீரமக்கள் தின நிகழ்வில் முஸ்லிம் பிரதிநிதி உரை

யாழ்ப்பாணம், ஜூலை 20

முஸ்லிம்கள் உட்பட நாம் ஒவ்வொருவரும் இடம்பெயரவும், அல்லற்படவும் நமக்கிடையே உள்ள ஒற்றுமையின்மையே காரணமாகும். தமிழ் பேசும் அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டால் ஸ்ரீலங்கா அரசு மட்டுமல்ல எவராலும் எம்மை அசைக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் ஒன்றியச் செயலாளரும், ஆசிரியருமான எஸ். ஹமீத்.

யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற புளொட் அமைப்பின் வீர மக்கள் தின இறுதிநாள் நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு காலத்திலே யாழ்ப்பாணத்தில் 33 அமைப்புக்கள் இருந்தன. தமது சொந்த வாழ்க்கையைத் தியாகம் செய்த ஒவ்வொரு தலைவர்களும் போற்றுதற்குரியவர்கள். தற்போதுள்ள அத்தனை தமிழ்க்கட்சிகளும் ஒன்றிணைந்தால் எமது விடுதலை வெகு தூரத்தில் இல்லை. ஏற்கனவே சில தசாப்தங்கள் முடிவடைந்து விட்டன. இனியும் நாம் காலந்தாழ்த்தமுடியாது. படையினரும், பொலிஸாரும் எங்களை வேண்டுமென்றே துன்புறுத்துகிறார்கள். இல்லாவிட்டால் அல்லைப்பிட்டியில் சோதனை முடித்து இரண்டு பக்கமும் உள்ள முட்கம்பிகளூடாக யாழ். வந்து சேரும் எம்மை பண்ணையில் வைத்து சோதனையிட வேண்டிய அவசியம் என்ன? இதற்கெல்லாம் சில தமிழ் அதிகாரிகளும் உடந்தையாயிருப்பது இங்கு மிகவும் வேதனைக்குரியவிடயமாகும். கப்பல் பயணத்தில் எமக்குள்ள பிரச்சினைகளுக்கு திருமலை அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர். இவற்றுக்கெல்லாம் தீர்வு காண நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவது அவசியம். அல்லாவிட்டால் தந்தை செல்வா சொன்னது போன்று தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"—என்றார்.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா உரையாற்றுகையில் —

அன்று தமிழாராய்ச்சி மாநாடு என்ற போர்வையில் கட்டவிழ்த்து விடப்பட்ட காவல் துறையினர் திட்டமிட்டு இந்தப் படுகொலைகளை மேற்கொண்டனர். கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். பெண்கள் ஆடைகளையப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். ஆனால் இன்று மருதானையில் ஒரு பெண்ணிற்கு நிகழ்ந்த கொடூரமான சம்பவத்திற்காக நாம் எல்லோருமே ஒன்றுபட்டுநிற்கின்றோம். மக்கள் போராட்டம் என்றால் அங்கு மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படவேண்டும். போராட்டத்திலே அக்கருத்துக்கள் பிரதிபலிக்க வேண்டும். கருத்துக்களைத் தெரிவிக்க எவருக்குமே உரிமையுண்டு— என்றார்.

ஓட்டோ சங்கப் பிரதிநிதி எஸ். பத்மராசா உரையாற்றுகையில் —

ஆரம்ப காலங்களில் எமது மூத்த தமிழ் அரசியல் தலைவர்கள் போலிவாதிகளால் ஏமாற்றப்பட்டதனால் தமிழ்த் தேசிய இனம்— தேசமில்லாத இனம் ஆக்கப்பட்டதனால் — தமிழரின் விடிவு நோக்கி அனைத்து இளைஞர்களும் ஆயுதம் ஏந்தினர். இன்று அவர்கள் பல கூறுகளாகப் பிரிந்து நிற்கின்றார்கள். இவர்கள் யாவரும் மீண்டும் ஒன்றுபட்டு விரைவில் எமது மண்ணை மீட்டுத்தரும் நாள் வெகு தூரத்திலில்லை. இதற்கு அண்மையில் நடைபெற்ற உணர்வுபூர்வமான ஹர்த்தால் சாட்சி — என்றார்.

கிராமசேவையாளர் எஸ். வைத்தியநாதன் உரையாற்றுகையில் —

தியாகிகளை மதிப்பதும், அவர்களை நினைவு கூருவதும் தமிழரின் மரபு ரீதியான செயலாகும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் தமிழர்கள் புத்தெழுச்சி அடைய வேண்டும் — என்று குறிப்பிட்டார்.

நிகழ்விற்குத் தலைமை வகித்து உரையாற்றிய மாநகரசபை உறுப்பினர் மு. தவநாதன் —

இந்த நினைவுத் தூபி வளைவை மாநகரசபையினதும், புளொட் அமைப்பினதும் நிதியிலிருந்து பெற்று அமைத்துள்ளோம். இவற்றை அமைப்பது பெரிய விடயமல்ல. தொடர்ந்து அவற்றைப் பேணுவதன் மூலமே அதன் உண்மையான இலக்கு அடையப்படுகின்றது. எமது உள்ளத்து உணர்வுகள் இந் நிகழ்வுகளின் மூலமே வெளிக்காட்டப்படுகின்றன — என்றார்.

ஆசியுரை வழங்கிய வடபிராந்திய இந்து பேரவைச் செயலாளர் எஸ். சிவலோகநாதக் குருக்கள் — ஆண்டுதோறும் மரணித்தவர்களுக்கு, அவர்களின் ஆத்மா சாந்தியடைய கிரியா பூர்வ வழிபாடுகள் செய்வது எமது சைவ — தமிழ்— மரபாகும். அதற்கமைய இப்படியான நிகழ்வுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவது அவசியம் — என்று குறிப்பிட்டார்,

நிகழ்வில் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் பெனடிக்ற் தனபாலசிங்கம், ஆசிரியர் இரா. செல்வவடிவேல் மற்றும் சனசமூக நிலையப் பிரதிநிதிகள் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். நிகழ்வின் இறுதியில் ஆசிரியர் என். கருணாகரன் 'புரட்சிக் கவிதை' வழங்கினார், (ஐ-9-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய அல்ஷேசன் நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.06, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு. (இராமகிருஷ்ணா பாடசாலைக்கு அருகில்) (90134)

கனன் கலர் பிறின்ரர் (புதியது) மற்றும் மிக நல்ல நிலையிலுள்ள கொலம்பியா தமிழ் ரைப்றைட்டர், கொலம்பியா ஆங்கில ரைப்றைட்டர் விற்பனைக்குண்டு. நேரில் வருக. ஆனந்தா, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல.2820 **(C/17479)**

## வெளிவந்துவிட்டது

இந்து நாகரிகம், இந்துசமயம்-சுருக்க வினாவிடை - பாகம் 2 இப்போது கிடைக்கிறது. ஆசிரியர்: "கோபாய் சிவம்" பாகம் 1 கிடைக்காமல் ஏமாந்தவர்கள் பலர். அதனால் உடனே பெற்றுக்கொள்ளுங்கள். பாகம் 1 மறுபதிப்பு விரைவில் வெளிவரும். (90191)

## மணமகள் தேவை

1965ஆம் ஆண்டு செவ்வாய் அற்ற **M.B.B.S. Doctor** இற்கு மணப்பெண் தேவை. உடன் ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை,178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (90242)

## தவறிவிட்டது

இல.2, கண்ணபுரம், நாவாந்துறை தெற்கு யாழ்ப்பாணம், ஜீவராசா செல்வராசா என்பவரின் விசேட அடையாள அட்டை (இல.0901013816) மேற்கூறிய இடத்துக்கும் யாழ். ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (90242)

## அறை வாடகைக்கு

யாழ்.ஆஸ்பத்திரிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீட்டில், மருத்துவட மாணவர்களுக்கு அறைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: விள.இல. 1331, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (90248)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு நியமனக் கடிதம்

தென்மராட்சி,ஜூலை20

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் கடந்த புதன் கிழமை புலோலி பொதுநூல்நிலைய மண்டபத்தில் பிரதேச செயலர் புகுந்தரம்பிள்ளையினால் வழங்கப்பட்டன.

ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் கு.அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார். (க-117)

## சனசமூக நிலைய ஆண்டு விழா

தென்மராட்சி,ஜூலை20

புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 46ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் சி.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கா.வே. குகேந்திரனும் (ஜெகன்), சிறப்புவிருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் கலந்துகொள்வர். (க-117)

## மாகாணக் கல்வி பணிமனைக்கு கணனி, றோணியோ!

யாழ்ப்பாணம்,ஜூலை20

வடக்கு - கிழக்கு மேலதிக மாகாணக் கல்விப்பணிமனைக்கு கணனி ஒன்று, போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று மற்றும் றோணியோ இயந்திரம் என்பவற்றை மாகாணக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இவற்றை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை விமானம் மூலம் எடுத்து வந்துள்ளார்.

இதேவேளை, மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு இன்னமும் தொலைபேசி, 'பக்ஸ்' வசதிகள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (க-9)

# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 - 02 - 1930 | 19 - 07 - 2001 |

**நீர்வேலி மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பிரதம அர்ச்சகர், எமது மதிப்பிற்குரிய**

**பிரம்மஸ்ரீ**

## கார்த்திகேய ஐயர் குகதாச சர்மா

*(இளைப்பாறிய அரச கட்டடப் பரிசோதகர் - P.W.D)*

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கதிர்காம கோயில் தேவஸ்தானம், நீர்வேலி.* (C/17495) தியாகராச குருக்கள் (மணி ஐயா)

*வல்வெட்டித்துறை*

# சிதம்பரக் கல்லூரி நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும்

காலம்:- நாளை **(21-07-2001)** சனிக்கிழமை

நேரம்: முற்பகல் 9.30 மணி

இடம்: **கல்லூரி மண்டபம்**

*தலைவர்:* **திரு.சு.சே.குலநாயகம்** *(தலைவர், பழைய மாணவர் சங்கம்)*

*பிரதம விருந்தினர்:* **கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா** *(தலைவர், தமிழ்த்துறை - யாழ்.பல்கலைக்கழகம்)*

### நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை: **திரு.செ.யோகச்சந்திரன்** *(கல்லூரி அதிபர்)*

ஆசியுரை: **திரு.வி.தெய்வேந்திர ஐயர்** *(சிரேஷ்ட பூசகர், செல்வச்சந்நிதி)*

சிறப்பு விருந்தினர்கள் உரை: **திரு.சி.சிவராஜா** *(கல்விப்பணிப்பாளர், வடமராட்சி வலயம்)*

**திரு.ச.சத்தியமூர்த்தி** *(முன்னாள் அதிபர்)*

பிரதம விருந்தினர்: **வெளியீட்டுரை**

**நூற்றாண்டு மலர் வெளியீடு**

முதற்பிரதி பெறுபவர்: **திருமதி த.சுரேந்திரநாதன்** *(அதிபர், கெருடாவில் இ.த.க.பாடசாலை)*

ஆய்வுரை: **திரு.கி.நடராசா** *(அதிபர், அ.மி.கல்லூரி, உடுப்பிட்டி)*

மலர்க்குழுவினர் சார்பில் உரை: **திரு.சு.குகப்பிரசாதன்** *(உதவி முகாமையாளர், இலங்கைவங்கி - பருத்தித்துறை)*

சிறப்புப் பிரதிகள் வழங்குபவர்: **திரு.வே.தி.செல்வரட்ணம்** *(பிரதிக் கல்வி நிர்வாகப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்)*

கலை நிகழ்ச்சிகள் வழங்குபவர்கள்:

**வல்வை சிவகுரு வித்தியாசாலை, வல்வை மகளிர் மகாவித்தியாலயம், வல்வை சிதம்பரக் கல்லூரி மாணவர்களும், பழைய மாணவர்களும்.**

நன்றி உரை: **திரு.பூ.அகமணிதேவர்** *(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)*

**கல்லூரிக் கீதம்**

***மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

**சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.**

*வல்வெட்டித்துறை.* (90250)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேய ஐயர் குகதாச சர்மா

(ஓய்வு பெற்ற கட்டடத்திணைக்களப் பரிசோதகரும், நீர்வை மீனாட்சி அம்மன் கோயில் அர்ச்சகரும்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மயிலணி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேய ஐயர் குகதாசசர்மா நேற்று (19-07-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெகதாம்பிகையின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன் (ப.நோ.கூ.சங்கம் - சுன்னாகம்), மாலதி, ஜெயக்குமாரி, சிவகுமார் (ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கா.சாம்பசதாசிவக்குருக்கள் (நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பிரதம குரு), சோ.பராசக்தி அம்மா ஆகியோரின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19-07-2001) வியாழக்கிழமை மாலை மயிலணி, சுன்னாகத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

கு.பாலகிருஷ்ணன்

கு.சிவகுமார்

(மகன்மார்)

*'கணேச வாசா'*
*மயிலணி,*
*சுன்னாகம்.* (C/17491)

## இரண்டாவது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்

## 20-07-2001

**HAPPY BIRTHDAY**



## செல்வி தர்மபாலா பிரணீத்தா

**தர்மபாலா - சாந்தினி தம்பதிகளின்** செல்வப்புதல்வி

# பிரணீத்தா

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (20.07.2001) வெள்ளிக்கிழமை திருகோணமலையிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

பிரணீத்தாவை அன்பின் அப்பா, அம்மா, அப்பம்மா, கொக்குவில் மேற்கு, சொர்ணவடலியில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, செல்வன் மாமா, ஞானம் மாமா, கனடாவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார்களான — டோறிஷா, ஹரிஷா, மனுஷா, ரவீந்திரன் மாமா, கொலண்டிலுள்ள பெரியமாமா, அத்தை, அத்தான்மார்களான தஜீவன், வினுஷன் மற்றும் கொக்குவில் கிழக்கில் இருக்கும் தாத்தா குடும்பத்தினர், உற்றார், உறவினர் அனைவரும் அருள்மிகு சொர்ண சித்தி விநாயகர் அருளாலும், உவர்மலை சித்தி விநாயகர் அருளாலும் பல்கலைகளும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*"துவாரகை",*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

**க.மகாதேவன்**

(90238)

## யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

காரைநகர்

**பழைய மாணவர் சங்கம் - வருடாந்தப் பொதுக்கூட்டம்**

இடம்:- **பாடசாலை மண்டபம்**

காலம்:- **22.07.2001 (ஞாயிற்றுக்கிழமை)**

நேரம்:- **முற்பகல் 10.00 மணி**

*பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது வருகை தரவும்.*

ஆ.நடராசா
செயலாளர்

(C-17481)

ஆ.பாலகிருஷ்ணன்
தலைவர்

# கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுருக்கள்

## சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்

(சிவசங்கர குருக்கள்)

அவர்கள் கடந்த 16-07-2001 மலேசியா சிறம்பான் மகாமாரியம்மன் தேவஸ்தானத்தில் காலமாகிய செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் ஆறாத்துயரும் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தகவல்:-*

பெரியதந்தை,

**பிரம்மஸ்ரீ இரத்தினஐயர் குடும்பம்,**

**இ.மகாலிங்கக்குருக்கள்.**

*அளவெட்டி அழகொல்லை*
*பிள்ளையார் கோயில்,*
*அளவெட்டி வடக்கு, அளவெட்டி.* (90247)

## மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2001
## மானிப்பாய் வலி. தென்மேற்கு பிரதேச சபை

### சைக்கிள் – மரதன் ஓட்டப் போட்டிகள் 22-07-2001

மேற்படி போட்டிகள் குறிக்க நேரத்தில் இடம்பெறும். ஓட்ட வீரர்களுக்கான பாதை விவரம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

**மரதன் ஓட்டம் 22-07-2001 காலை 6.00 மணி (புதிய நேரம்),**
**சைக்கிள் ஓட்டம் 22-07-2001 காலை 7.00 மணி (புதிய நேரம்)**

பளுதூக்கல் போட்டி எதிர்வரும் 29-07-2001 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் இடம்பெறும்.

**இடம்:- மானிப்பாய் மகளிர் கல்லூரி.**

செ.ரமேஷ் ஜே.பி
உள்ளூராட்சி உதவியாளர்,
விளையாட்டு இணைப்பாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை.

வெ.அ.ஜோன்சன் ஜே.பி.யு.எம்.
தலைவர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (C/17501)



அனைத்துலக சைவக்குமார் அர்ச்சகர் பேரவை ஒன்றியமும்
தும்பளை நெல்லண்டையாள் வெளியீட்டுக் கழகத்தின் ஆதரவிலே
தும்பளை இலட்சுமணன் தோட்டம்

### அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் வட பத்திரகாளியம்மன்

தேவஸ்தான கும்பாபிஷேக மலரும் சைவ குலதீபம் என்ற

### சஞ்சிகை வெளியீட்டு விழா

இடம் :- தும்பளை இலட்சுமணன் தோட்டம், வீரமாகாளியம்மன் தேவஸ்தான மண்டபம்.
காலம் :- 20-07-2001 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணி (இ.நேரம்)
தலைவர் :- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.
வெளியீடு :- பேராசிரியர் அ.சண்முகதாஸ்
சிறப்பு விருந்தினர்:- திருமதி அருள்நங்கை சண்முகநாதன்
வரவேற்புரை :- பொ.அரவிந்தன் B.Sc ஆசிரியர்,யா/ஹாட்லிக் கல்லூரி
அருளுரை :- சிவாச்சாரிய பீடாதிபதி
சிவஸ்ரீ கு.முத்துக்குமாரசாமிக் குருக்கள்
ஆசியுரை :- சமஸ்கிருத பண்டிதர் சிஷ்யா நிபுணர்
பிரம்மஸ்ரீ சதாசிவசர்மா
சிவப் பிரம்மஸ்ரீ சு.சுரேஸ்வரக்குருக்கள்.
வாழ்த்துரை :- சிவஸ்ரீ க.சோமசுந்தரக் குருக்கள் J.P
கணபால சுவாமிகள்
தோட்டத்து ஞானவைரவர் தேவஸ்தானாதிபதி
நூல் மதிப்பீடு:- பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்.
முகற் பிரதி :- பொ. இராஜதுரை அவர்கள்
மகாலட்சுமி பல்பொருள் வாணிபம்
தலைவர்:- து.நெ.பத்திரகாளி அம்மன் வழிபடுவோர் சங்கம்.
இதழாசிரியர் பதிலுரை:- சிவஸ்ரீதியாக சோமாஸ்கந்தராஜக்குருக்கள்.
இங்ஙனம்,ஆதீனகர்த்தா. ஆலயம்,பருத்தித்துறை. (90266)


## நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை20

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட நீர்வேலி உப அலுவலகப் பிரிவிலுள்ள கட்டாக்காலி நாய்கள் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதாக நீர்வேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி சி.தவராஜா அறிவித்துள்ளார்.

இப்பகுதியிலுள்ளவர்கள் தங்களது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-4)


**A/L 2002**
**PHYSICS**
ஓட்ட மின்னியல்
Sat., Sun. 4-5p.m.
Mr. ஸ்பெல்மன்
2003 CHE - INORGANIC
C/Ma. நடைபெறுகிறது
SHAMROCK
(C/17498)



**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார், மீனா
சுவலட்சுமி, வடிவேல்
நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த
**மாயி** (ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30
(90256) (புதிய நேரம்)



**ராஜா** யாழ்ப்பாணம்
மூன்று தினங்கள் மட்டும்
9 வேடங்களில் நடித்த அஜித்,
வசுந்தராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
**CITIZEN சிட்டிசன்**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
23.07.2001 முதல்
**வாஞ்சிநாதன்**
(C/17443)



## வெளிவந்துவிட்டது

வணிகக்கல்வி
**O/L வினாவிடைப் புத்தகம்**
புதிய பாடத்திட்டத்திற்கமைவானது.
*ஆசிரியர்:*
**V.N.சிவானந்தராஜா**
*வெளியீடு:-* மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழு. (90263)



## பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



*உயர்திரு.*
*சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம்*
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

ஆத்தியடி பருத்தித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர் உயர்திரு. சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 16.07.2001 அன்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிபதி உயர்திரு. இ.த.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரை மனதாரப் பெருமையுடன் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்,**
*பஸ்நிலையம், பருத்தித்துறை.*
(90259)


## முக்கிய அறிவித்தல்

தென்மராட்சி பிரதேச எல்லைக்குட்பட்ட கிராமிய கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள/ஈடுபட விருப்பமுள்ள கைத்தொழில் முயற்சியாளர்களை ஒருங்கிணைத்து கைப்பணியாளர் சங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதென கைத்தொழில் அமைச்சு மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சங்கத்தில் சேர்வதற்கெனத் தத்தமது கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக விண்ணப்பம் சமர்ப்பித்த அனைவரையும் 2001.07.23 திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவிருக்கும் மேற்படி சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான கூட்டத்தில்,தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக விண்ணப்பிக்க முடியால் போனவர்களும் இதில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

*பிரதேச செயலர்,*
தென்மராட்சி, சாவகச்சேரி.
(C/17496)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி
### காசிப்பிள்ளை சின்னம்மா



அன்னை மடியில் 02-05-1935
அம்மன் திருப்பாதத்தில் 03-08-1997

அம்மா உன் பிரிவுத் துயரால்
ஆண்டு நான்கு ஓடி மறைந்திடினும்
உங்கள் அன்பு முகம் மறைந்திடுமா?
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் - உங்கள்
நினைவலைகள் நெஞ்சை விட்டு நீங்காதே - அம்மா!
அன்பால் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!
அன்பு முகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகிய நாம்
இப்போது தூக்கமின்றித் துடிக்கின்றோம்.
எத்தனை யுகங்கள் மலரட்டும் - எம்
நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்!
உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!

உங்கள் ஆத்மசாந்திக்காய்

இந்த ஆடி அமாவாசை நன்னாளில் வட்டுவினிப் பிள்ளையார், வட்டுவினி வைரவர், வட்டுவினிக் கண்ணகி அம்மன், இணுவில் கந்தன் துணை கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

*பிள்ளைகள்:*
கா.சிவனேசன் (கனடா),
கா.வரதராசா, கா.காந்தகுமார் (லண்டன்),
சி.சுசீலாதேவி (வவுனியா).

*மருமக்கள்:*
க.சிவலிங்கம் (வவுனியா - ஆசிரியர்),
சி.வாணி (கனடா), வ.சறோஜினிதேவி,
கா.கலையரசி (லண்டன்).

*சகோதரர்:*
ம.ஈஸ்வரி (காலஞ்சென்றவர்),
க.செல்வராசா, ச.சின்னண்ணை முத்துலிங்கம்.

*பேரப்பிள்ளைகள்:*
கஜன் (கனடா), அருண்(கனடா),
அம்பதிசன், அபிநயா (வவுனியா),
ரதீசன் (லண்டன்),சஜிகான்.

**பொ.காசிப்பிள்ளை,** *பொன்னப்பாபதி, வட்டுவினி லேன், இணுவில் மேற்கு.* (C/17500)



உ

## அல்வாய் வேவிலந்தை
## ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான
## மஹோற்சவம்

*அம்பாள் அடியார்களே!*

மேற்படி ஆலய மஹோற்சவம் நாளை (21.07.2001) சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

21-07-2001 நாளை சனி காலை 10மணி - கொடியேற்றம்
27-07-2001 வெள்ளி மாலை - திருவிளக்குப் பூஜை
31-07-2001 செவ்வாய் காலை - சுமங்கலி பூஜை
01-08-2001 புதன் காலை - வசந்த உற்சவம்
02-08-2001 வியாழன் மாலை - வேட்டை, சப்பறம்
03-08-2001 காலை 9.30 மணி - தேர் வெள்ளி
03-08-2001 மாலை 4 மணி - வரலக்ஷ்மி பூசை
04-08-2001 சனி காலை 6 மணி - தீர்த்தோற்சவம்
05-08-2001 ஞாயிறு மாலை - பூங்காவன இளைஞர் விழா

**மஹோற்சவ காலத்தில் தினமும்**
**சமயச் சொற்பொழிவு இடம்பெறும்**

21-07-2001 - 25-07-2001 வரை *'ஆன்மீக வாழ்வு'*
திரு. ஆறு. திருமுருகன்
26-07-2001 *'உலகத்து நாயகியே'*
பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
27-07-2001 *'தாயும் சேயும்'*
பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
28-07-2001 *'முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே'*
பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
29-07-2001 *'எங்கும் நீ நிறைந்தாய்'*
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
30-07-2001 *'தேச முத்துமாரி'*
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
31-07-2001 *'வண்ணமும் வடிவமும்'*
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
01-08-2001 *'நம்பினார் கெடுவதில்லை'*
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

சொற்பொழிவு தினமும் பி.ப. 5 மணி முதல் 6 மணி வரை நடைபெறும்.

**25-7-2001 புதன் காலை 10 மணிக்கு சித்திரத் தேர் வெள்ளோட்டம் இடம்பெறும்**

(90257) **- பரிபாலனசபையினர்.**

## மண்டைதீவில் நேற்றுக் காலை
# இளம் விதவைப் பெண் மீது பாலியல் வல்லுறவு முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூலை20

மண்டைதீவுப் பகுதியில் நேற்றுக் காலை 8.00 மணியளவில் வீட்டில் தனியாக இருந்த இளம் விதவைப் பெண் ஒருவரைக் கடற்படைச் சிப்பாய் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்ததாகக் கூறப்படுகின்றது.

நாற்பது வயதுடைய இந்தப் பெண, மேற்படி சம்பவத்தில் காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

வீட்டில் தனித்து இருந்த தன்னை மேற்படி நபர் திடீரென வந்து இறுக அணைக்க முற்பட்டதாகவும் -

அப்போது தான் கூச்சலிட்ட சமயம் அந்த நபர் தனது வாயைப் பலவந்தமாகப் பொத்த முயன்றதால் வாயில் காயங்கள் ஏற்பட்டதாகவும் -

அத்துடன் நிலத்தில் வீழ்த்தி தன்னைக் கெடுக்க முயன்றபோது தனக்கு கை, கால்களில் உரசல் காயங்கள் ஏற்பட்டதாகவும் -

அந்தப் பெண் குறிப்பிட்டதாகக் கூறப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு தனது கணவனை இழந்த இப்பெண்ணுக்கு 12 வயதில் ஒரு மகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10-117)

# டக்ளஸுடன் பேசுவதற்கு மாணவர் ஒன்றியம் மறுப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்துமாறு இராணுவத்தினராலும் பல்கலைக்கழக சிரேஷ்ட அதிகாரி ஒருவரினாலும் தங்களுக்கு வற்புறுத்தலுடன் தெரிவிக்கப்பட்ட ஆலோசனையை தாங்கள் அடியோடு நிராகரித்து விட்டதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்பல்கலைக்கழகத்தைத் திறப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து யாழ். சுபாஸ் ஹோட்டலில் உள்ள 51 ஆவது படையணித் தலைமையகத்தில் அந்தப் படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரவுக்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை பேச்சுக்கள் நடந்தன. அப்பேச்சுக்களில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் உடன் இருந்தார்.

அந்தச் சந்திப்பிலேயே மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் இவ்வாறு வற்புறுத்தலுடன் கூடிய ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் - அந்த ஆலோசனையை ஏற்க தமது ஒன்றியம் அடியோடு மறுத்துவிட்டதாகவும் -

மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வன்முறை நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழகத்தையோ, பல்கலைக்கழக மாணவர் விடுதிகளையோ பயன்படுத்த மாட்டோம் என்று ஓர் ஒப்புதல் கடிதத்தைத் தரும்படி இராணுவத் தரப்பு மாணவர் பிரதிநிதிகளைக் கோரியதாகவும் -

இதுவரை ஜனநாயக விரோதச் செயல்களில் தாங்கள் ஈடுபடவேயில்லை என்ற சாரப்பட கடிதம் ஒன்றை இராணுவத்துக்கு வழங்குவது குறித்து மாணவர் ஒன்றியத்தினர் ஆலோசித்து வருவதாகவும் - தெரியவந்தது. (உ)

# நாடாளுமன்றில் இன்று எதிர்க்கட்சிகள் கூட்டம்

கொழும்பு,ஜூலை20

நாடாளுமன்றத்தில் இன்று காலை 10 மணிக்கு கூடவிருக்கும் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு முக்கிய சில தீர்மானங்களை எடுப்பர் என்று ஐ.தே.கட்சியின் பிரமுகர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

எதிரணியினர் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருப்பதால் அதைப் பயன்படுத்தி சபாநாயகரை மாற்றவும், நாடாளுமன்றத்தை இயக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க எதிர்க்கட்சிகள் முஸ்தீபு செய்து வரும் இவ்வேளையில் -

அதனை ஏற்பதற்கு சபாநாயகர் நாட்டில் இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகவும் -

அது குறித்தும் அதற்குரிய மாற்று ஏற்பாடுகள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டப் போராட்டத்துக்கு எதிராகப் பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டித்தும் தீர்மானம் ஒன்றும் இன்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

நாளை ஆரம்பம்!
கம்பனி
A/L 2002
கணக்கீடு
D.SAM
பிற்பகல் 2.00 மணி
D.M.I.
(90216)

நாளை ஆரம்பம்!
A/L 2002
கணக்கீடு
பகுதி II
வருமானச் செலவுக் கணக்கு
பிரிவு I → 7-8
பிரிவு II → 11-12
ஆரம்பம்: 21-07-2001→ SAT
Mr. BALAVASAN
B.B.A(F.M.Spl.)
விக்னா
கல்வி நிறுவனம்
(90235)

New Science College
பௌதிகவியல்
2003
"அலைகளும் அதிர்வுகளும்"
குகன் (B.Sc.)
(90249)

எமது ஒறிஜினல்
வீடியோ CD வெளியீடுகள்
சிட்டிசன்
சிறிவரும் காளை
என் புருசன் குழந்தை மாதிரி
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/17504)

### வழமைநிலை பாதிப்பு

அரசுக்கு எதிராக எதிரணியினர் நேற்று மேற்கொண்ட போராட்டம் காரணமாக தலைநகர் கொழும்பு மற்றும் சுற்றுப் பிரதேசங்களில் சகல சேவைகளும் ஸ்தம்பித்திருந்தன. பாடசாலைகள் பூட்டப்பட்டுக் கிடந்தன; கடைகள் யாவும் திறக்கப்படவில்லை; போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை. (உ-3)

### உதைபந்தாட்டம்

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தில் இணைக்கப்பட்ட லீக்குகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று நாளை ஆரம்பமாக இருக்கின்றது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கும் பருத்தித்துறை லீக்கும் மோதவிருக்கின்றன.

நீண்டகால இடைவெளிக்குப் பினனர் ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் போட்டிகள் இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செய்துள்ளது. (ஐ-3)

### பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி நகரும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் பேலியகொடை, நுகேகொடை, கொட்டியாவத்தை, கலகிசை ஆகிய நான்கு முனைகளிலிருந்து நேற்றுக் காலை முதல் ஆயிரக்கணக்கானோர் ஒன்று கூடி ஆங்காங்கே பொலீஸார் போட்டிருந்த தடைகளையும் அகற்றியபடி தலைநகரை நோக்கி முன்னேறினர். அவர்களை பேலியகொடை, வத்தளை, களனி, கொட்டியாவத்தை, பிப்பிலியானை, கல்கிசை, வெள்ளவத்தை, பொரளைச் சந்தி, மருதானை, நுகேகொடை ஆகிய இடங்களில் பொலீஸார் வழிமறித்துத் தாக்கினர்.

சரமாரியாகக் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன; இறப்பர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன; குண்டாந்தடியடிப் பிரயோகமும் கண் மண் தெரியாமல் நடத்தப்பட்டது.

அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களும் கற்களை வீசித் திருப்பித் தாக்கினர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளை அப்படியே மடக்கிப் பொலீஸார் மீது திருப்பி எறிந்தனர். இதனால் ஆங்காங்கே பல இடங்களில் பெரும் களேபரங்கள் ஏற்பட்டன.

பொலீஸாரின் பத்து வாகனங்கள் அரச எதிர்ப்பாளர்களால் அடித்து நொறுக்கப்பட்டன.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாகனம் பொலீஸாரால் அடித்து நொறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மருதானைப் பகுதியில் மட்டும் நேற்று சுமார் ஐந்நூறு கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல இடங்களில் பொலீஸாருடனான மோதல்களைத் தவிர்ப்பதற்காக அரச எதிர்ப்பாளர்கள் பிரதான வீதிகளைத் தவிர்த்து, சந்துபொந்து, குறுக்கு வீதிகளைப் பயன்படுத்தித் தலைநகரின் மையப் பகுதியை நோக்கி முன்னேறினர்.

தெஹிவளையிலிருந்து புறப்பட்ட பேரணியில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் பங்குபற்றினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.செல்வராசா, ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, ஐ.தே.க.வின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்.

ஊர்வலமாகச் சென்றவர்கள் தடைகளையும் மீறி வெற்றிகரமாக புஞ்சிபொரளையை அடைந்து அங்கு மாபெரும் கூட்டத்தை நடத்தினர்.

இந்தக் கூட்டத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஜனநாயக இடதுசாரி முன்னணிப் பிரமுகர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உரையாற்றினர். (உ-ஒ-3-10)

முக்கிய அறிவித்தல்
19-07-2001 வியாழன்
NEW SCIENCE COLLEGE
விளம்பரத்தில் அலைகளும்
அதிர்வுகளும் பௌதிகவியல்.
PAPER CLASS
ஆசிரியர்:-கருணாநிதி
B.Sc. (Spl) எனக் கொள்ளவும்
(90262)

# நான்கு பெண் ஊர்காவலர் பலி!

வவுனியா சிதம்பரபுரத்தில் நேற்று பிற்பகல் 4.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் 4 பெண் ஊர்க்காவல் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என வவுனியாவில் படைத்தரப்பு தெரிவித்தது.



பொலீஸாரின் அடக்குமுறைத் தாக்குதலுக்கு இலக்காகும் ஆர்ப்பாட்டக்காரர்களுள் ஒருவர்..

காவல் பணி முடிந்து வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருநதபோது, விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த நால்வரின் சடலங்களும் மரண விசாரணைக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவத்தை அடுத்து படையினரும் பொலீஸாரும் சேர்ந்து அந்தப்பகுதியில் தேடுதல் நடத்தினர் . ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. (உ-ஒ-10)

## ரணிலை இலக்குவைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலை மோசமடைந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் மெய்ப்பாதுகாவலர்கள் அவரை மீண்டும் காரில் ஏற்றிப் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

நுகேகொடையில் பொலீஸார் ரணிலை நோக்கித் தீர்த்த றப்பர் குண்டுகளுள் ஒன்று அவரது தோளைச சிராய்த்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

"இறப்பர், கண்ணீர்ப் புகைக் குண்டுகளால் சுட வேண்டாம்" என ரணிலின் பாதுகாப்பு அதிகாரிகள் பொலீஸாரைக் கேட்டுக்கொண்டனர். எனினும் சரமாரியாகக் குண்டுகள் ரணில் அருகே வந்துவிழுந்தன.

இதனைத் தொடர்ந்து மீண்டும் தனது உத்தியோகபூர்வ அலுவலகத்துக்கு ரணில் திரும்பினார்.

பின்னர், அங்கு அலுவலகத்திற்கு வந்திருந்த ஆனந்தசங்கரி மற்றும் குழுவினரை அழைத்துக் கொண்டு பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருதானைப் பகுதிக்கு ரணில் புறப்பட்டுச் சென்றார்.

அங்கு மேம்பாலத்தில் இருந்து உரையாற்றுவது அவரது நோக்கமாக இருந்தது. மேம்பாலத்தை நோக்கிச் செல்ல அவர் காரில் இருந்து இறங்க முற்பட்டார். அவ்வேளையில் அவரது காரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் பொலீஸாரினால் பிரயோகிக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களை புஞ்சிபொரளைப் பக்கமாகச் செல்லுமாறு ரணில் கேட்டுக்கொண்டார்.

புஞ்சிபொரளையில் வைத்தும் ரணில் சென்ற காரின் பக்கமாகக் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் பிரயோகிக்கப்பட்டன. எனினும் அவற்றையெல்லாம் மீறி அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் ரணில் உரையாற்றுவதைப் பொலீஸாரால் தடுக்க முடியவில்லை.

## தன்னை ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நான் அங்கு செல்வதைப் பொலீஸார் பார்த்தனர். மேலும் அதிகாரபூர்வமாக எனக்குத் தரப்பட்ட பாதுகாப்பு வாகனங்களும் என்னருகே நின்றன.

"எங்கள் கட்சியின் துணைத் தலைவர் காமினி அத்துக்கோறளையிடம் பேசுவதற்காக நான் கீழே இறங்கினேன். அந்தச் சமயத்தில் பொலீஸார் என்னை நோக்கி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினார்கள்; றப்பர் குண்டுகளால் சுட்டார்கள்.

"வேண்டுமென்றேதான் இது நடந்திருக்கிறது. நான் அங்கே சென்றதை முதலிலேயே பொலீஸார் நிச்சயம் பார்த்திருப்பார்கள். பொலீஸாரில் சிலர் எனக்கு வணக்கமும் தெரிவித்தனர்.

முதல் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசப்பட்டவுடன் என்னுடைய பாதுகாப்பு அதிகாரிகள் என்னை ஜீப்புக்குள் தள்ளிவிட்டார்கள். பிறகு அவர்கள் வீதியில் படுத்துக் கொண்டார்கள். பின்பு துப்பாக்கிச்சூடு ஓயும்வரை நாம் அப்படியே படுத்துக் கொண்டு காத்திருந்தோம்" - என்றும் ரணில் கூறினார்.

### கூட்டத்தில் ரணில் கூறியவை

நேற்று பொலீஸாரின் தடையையும் மீறி புஞ்சிபொரளையில் எதிரணியினர் நடத்திய பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோது ரணில் கூறியதாவது:-

இலங்கையின் வரலாற்றில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அதிக தடவைகள் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டது இதுவே முதல் தடவை.

என்னைக் கொலை செய்வதன் மூலம் தனது ஜனநாயக விரோத ஆட்சியைத் தொடரவே சந்திரிகா முயற்சி செய்கிறார்.

ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு எதிரான இன்றைய போராட்டம் ஒரு தொடக்கம் மட்டுமே - ஜனாதிபதி இப்போது எமது முற்றுகையில் இருக்கிறார்.

சமாதான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளை ஜனாதிபதி ஹிட்லரின் பாணியில் நசுக்க முயன்றார்.

இத்தகைய போராட்டங்கள் இனித் தொடரும். நாளை எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி அடுத்த கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி மேலும் ஆராயும் -

ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடும் முயற்சிகளைத் தோற்கடிப்போம். அதற்கான ஏற்பாடுகளை நாம் இன்று ஆரம்பித்தோம். இந்தப் போராட்டங்களை இதனைப் போலவே நாட்டின் சகல கிராமங்களுக்கும் கொண்டுசெல்ல வேண்டும். நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி ஜனநாயகத்தை நிலைநிறுத்தும்வரை, எமது போராட்டத்தை நாம் நிறுத்தப் போவதில்லை.

ஜனாதிபதியின் ஏகாதிபத்திய நிர்வாகம் அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளது. கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியுள்ளது. இதனால் இருவர் இறந்துள்ளனர்.

என்மீது றப்பர் குண்டு, கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகிக்கும்படி உத்தரவிட்டது சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரான காமினி கருணாதிலக்கவே. இந்தச் செயலை அறிந்திருந்த இராணுவத்தினர் அதனை ஆதரிக்கவில்லை. கீழ்மட்ட பொலீஸ்காரர்களும் இதனை ஆதரிக்கவில்லை.

மருதானைப் பகுதிக்கு நான் சென்றபோது ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் சில பொலீஸ் உடையணிந்து என்மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத்தாக்குதலை நடத்தினர்.

### ஹிட்லர் மேடம்

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம் எதிர்க்கட்சித் தலைவரான என்னைக் கொலை செய்து ஆட்சியில் நீடிக்கப்பார்க்கிறது. தனது அதிகாரத்தை பாதுகாத்துக்கொள்ள எந்த நடவடிக்கையையும் எடுக்க 'ஹிட்லர் மேடம்' தயாராக இருக்கிறார். அவருக்கு ஒன்று கூறுகிறேன். இன்றுடன் உங்கள் ஏகாதிபத்திய ஆட்சி ஒழிந்தது. இன்று ஜனநாயகம் வெற்றி பெற்றது.

ஜே.வி.பியினர் எதிர்வரும் 23ஆம் திகதி இதேபோன்ற எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தவுள்ளனர். அந்த எதிர்ப்பு ஊர்வலத்திலும் இதேபோன்று அரசாங்கம் கைவைக்க முயன்றால் நாம் மேலும் இதே நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவோம் என்று ஜனாதிபதிக்கு நினைவுபடுத்துகிறேன் - என்றார் அவர். (உ-ஒ-3-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.